
# 1977க்குப் பிறகான *தீக்ஷை* முறைகள்



ஸ்ரீல பிரபுபாதாவின் *'ரித்விக்' தீக்ஷை* முறைக்கு ஆதரவான தகுந்த சாத்திர ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களின் தொகுப்பு

---

ஸ்ரீ கிருஷ்ணா மந்திரின் நிலை அறிக்கை

*பதிப்பு 1.0*

இவ்வுலகமே நிம்மதியாய் ஒன்று கூடி வாழ்வதற்கான

வீட்டை அமைத்த

# தெய்வத்திரு

# அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி பிரபுபாதா

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்க (இஸ்கான்) ஸ்தாபக ஆச்சாரியர்

அவர்களுக்கு எங்கள் சமர்ப்பணம்

# முன்னுரை

இந்த புத்தகத்தைத் தொகுக்கும் 2016-ம் ஆண்டான இவ்வேளையில், ஸ்ரீல பிரபுபாதா இம்மண்ணுலகில் நமது ஜட பார்வையிலிருந்து மறைந்து 39 ஆண்டுகள் கடந்து விட்டன.

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் இம்மண்ணில் இருந்த கடைசி 12 ஆண்டுகளில், அவரது திவ்யமான வழிகாட்டுதலினால் ஹரே கிருஷ்ண இயக்கம் பெரும் மகத்துவத்தோடு விரிந்து, உலகத்தின் ஆறுகண்டங்களுக்கும் பரவி, அதிர்ஷ்டவசமான ஆத்மாக்களை ஈர்த்து, இறைவனை சென்றடையும் மேன்மையான பாதையின் இறுதிப் பயணத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்தியது.

அப்போது அவ்வியக்கத்தின் பரிசுத்தம் மறுக்கமுடியாத வண்ணம் ஓங்கியிருந்தது உண்மையென்றாலும், இவ்இயக்கித்தில் எந்தவித பிரச்சனைகளும் இல்லையென்று சொல்வதற்கில்லை. அனுபவமற்ற பக்தர்கள், பல நிலைகளிலும் தவறுகள் புரிந்த போதிலும், தனது தெய்வீக வலிமையால் ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் இந்த அகில உலக இயக்கத்தை பொறுமையுடன் கவனித்து வழிநடத்தியதோடு தனது சீடர்கள் பக்குவமடைவற்கான பயிற்சியை இடையறாது வழங்கி வந்தார்.

அவர் நம்முடன் இருந்த கடைசி காலத்தில், அவரது சீடர்களிடம் அவர் முன் வைத்த முக்கிய கோரிக்கைகளில் ஒன்று:

"நான் இந்த ஜட உடலை விட்டுப் பிரிந்த பிறகு தாங்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக ஒத்துழைத்துச் செயல்படுவதன் வாயிலாக என் மீது தாங்கள் வைத்துள்ள உண்மையான அன்பு வெளிக்காட்டப்படும்"

"அனைத்து கிளைகளும் தங்களுடைய சுய அடையாளத்துடனும், ஒத்துழைப்புடனும், **ஆச்சாரியரை மையமாக வைத்தும் செயல்படவேண்டும்** என்பதே என்னுடைய விருப்பமாகும். இவ்வகையில் நாம் உலகம் முழுவதும் எத்தனை மையங்கள் வேண்டுமானாலும் திறக்கலாம்."

--- கீர்த்தானந்தாவுக்கு ஸ்ரீல பிரபுபாதாவின் கடிதம், பிப்ரவரி 11, 1967, ஸான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா, அமெரிக்கா.

ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதாவை மையமாக வைப்பதென்றால், அவரின் போதனைகளை மையமாக வைப்பதென்று பொருள். அவ்வகையில் மட்டுமே நம்மால் ஒத்துழைப்புடன் ஒன்றுக்கூடி இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

மாறாக நம் இயக்கத்தின் கடந்த 39 ஆண்டு காலச் சரித்திரத்தில் நாம், மரபு மீறிய செயல்கள், மோசடி, நம்பிக்கை துரோகம், விரக்தி, பிளவுகள், பொறாமை மற்றும் வன்முறை செயல்கள் பலவற்றை கண்ணுற்றோம். இந்நிலையில், இவற்றுக்கான

காரணங்களை கண்டறிந்து, அவற்றிற்கான தீர்வை செயல்படுத்துவது இன்றியமையாததாகும்.

“இந்த உலகத்தில் உள்ள எந்த அந்நிய சக்தியாலும் நமது இயக்கத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியாது; மாறாக இதை உள்ளிருந்து மட்டுமே அழிக்க முடியும்.” என்று ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் கூறியது போலவே, நமது இயக்கத்தின் அழிவு அவருடைய கட்டளைகளை மீறிய போதே ஆரம்பித்தது.

நூலில் முத்துக்கள் கோர்க்கப்பட்டுள்ளது போல, நமது இயக்கம் ஸ்ரீல பிரபுபாதரின் உபதேசங்களால் தாங்கப்பட்டுள்ளது. அவரின் போதனைகளை நிராகரித்தால், அக்கயிறு அறுந்து அழகிய மாலை சிதைந்து விடும். துரதிஷ்டவசமாக, ஸ்ரீல பிரபுபாதாவின் மறைவுக்குப்பின் அவரது உபதேசங்கள், குறிப்பாக *தீக்ஷை*யின் விஷயத்தில் பல்வேறு வகையிலும் மாற்றப்பட்டு இவ்வியக்கத்தின் வளர்ச்சியை சிதைத்தது.

இப்புத்தகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

1. ஸ்ரீல பிரபுபாதாவின் மறைவுக்குப்பின் *தீக்ஷை* எவ்வாறு வழங்கப்படவேண்டும் என்பது குறித்த இறுதிக் கட்டளையைக் கற்றறிதல்.

2. அவரது உபதேசங்களை சாத்திர மற்றும் வரலாற்று ஆதாரங்களின் வாயிலாக நிருபித்தல்.

3. நமது அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கித்திலுள்ள பிரச்சனைகளின் ஆணிவேர், அவற்றால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் அவற்றிற்கான தீர்வை விளக்கும் விதமாக சாத்திரக் குறிப்புகளை வழங்குதல்.

இந்நூல், முழுக்க முழுக்க ஸ்ரீல பிரபுபாதாவின் அதிகாரப்பூர்வமான ஆவணங்கள், பகவத்கீதை, ஸ்ரீமத் பாகவதம் மற்றும் இதர சாத்திர நூல்களின் மீதான அவரது உரைகளிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஸ்ரீல பிரபுபாதாவின் புனிதப் பணிக்கும், அவரது உண்மை விசுவாசி பக்தர்களுக்கும் செய்யும் ஒரு சேவையாகக் கருதியே இந்நூலை தொகுக்க முயற்சித்துள்ளோம்.

“மனித இனத்தின் முக்கியப்பணி எல்லாநேரமும் முழுமுடற்கடவுளை நினைப்பது, அவரது பக்தர்களாவது, பரமபுருஷ பகவானை வழிபட்டு அவருக்கு அடிபணிவது போன்றவையாகும். இறைவனின் அதிகாரம் பெற்றப் பிரதிநிதியான ஆச்சாரியர் இந்நெறிகளை நிறுவுகிறார். ஆனால் அவர் மறையும் பொழுது இவையெல்லாம் மீண்டும் தலைகீழ் மாற்றமடைகின்றன. **ஆயினும் ஆச்சாரியாரின் நிறைவான சீடர்கள் தங்கள் குருவின் கட்டளைகளை முறையாகப் பின்பற்றுவதின் மூலம் இச்சூழ்நிலையை மாற்ற முயல்கின்றனர்.**”

- ஸ்ரீமத் பாகவதம் 4.28.48-ன் பொருளுரை

ஸ்ரீ கிருஷ்ணா மந்திர், சிங்கப்பூர் மையத்தின் தலைவர் மற்றும் அகில உலக ஸ்ரீ கிருஷ்ணா மந்திர் குழுமத்தின் மூத்த ஆலோசகருமான ஸ்ரீமான் சுந்தர் கோபால் பிரபு அவர்களுக்கு எங்களுடைய சிறப்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் தனது வாழ்க்கையில், நாற்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக ஸ்ரீல பிரபுபாதாவின் சேவையில் மனமாற ஈடுபட்டு வருவதோடு மட்டுமல்லாது, அனுதினமும் ஸ்ரீல பிரபுபாதாவின் திவ்ய நூல்களை மிக உன்னிப்பாக படித்து வருபவராவார்.

குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக ஸ்ரீமத் பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களிலிருந்து *தீக்ஷை* முறை குறித்த ஆதாரங்களையெல்லாம் திரட்டி, அவற்றைக் கொண்டு அனைவரின் நன்மைக்காக அவர் ஓர் தொகுப்பை தயாரிக்க எண்ணினார். அதுமட்டுமல்லாது, அவர் ஸ்ரீல பிரபுபாதாவை மையமாகக் கொண்ட முறையை ஆதரிக்கும் பக்தர்களுக்கு தீவிரமாக ஆதரவளிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களோடு ஒன்றிணைந்து ஒற்றுமையாக இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தை முன்னேற்றிச் செல்ல அயராது பணியாற்றி வருகிறார்.

இந்நூலில் உள்ள ஆவணங்கள் மற்றும் சாத்திர ஆதாரங்கள் தற்போதைக்குப் போதுமானவை. *தீக்ஷை*யைக் குறித்த இவ்வழக்கை மேலும் ஆதரிக்கும் ஆவணங்கள் பிற்காலத்தில் கண்டறியப்படுமானால், அவை பின்வரும் வெளியீடுகளில் சேர்த்துக்கொள்ளப்படும். அதுபோலவே தகுதி வாய்ந்த வாதங்கள் ஏதேனும் வருங்காலத்தில் தோன்றினால், அவைகளும் சேர்த்துக்கொள்ளப்படும். இவ்வகையில் மாற்றங்கள் செய்யப்படும் அந்நூல் அச்சமயத்தில் புதுப்பதிப்பாக வெளியிடப்படும். தற்போதைக்கு இந்த வெளியீடு **“1977க்குப் பிறகான *தீக்ஷை* முறைகள்”**, பதிப்பு 1.0 என்று அழைக்கப்படுகிறது.

தங்கள் சேவையில்,
ஸ்ரீ கிருஷ்ணா மந்திர் குழு

# பொருளடக்கம்


**அறிமுகம்** 7

**அத்தியாயம் 1: ஆவண ஆதாரங்கள்** 10

1.1: "நியமன ஒலி நாடா" - ஓர் ஆய்வு 10
1.2: அதிகாரப்பூர்வமான பிரதிநிதிகளின் (*ரித்விக்*) நியமனம் 14
1.3: ஸ்ரீல பிரபுபாதாவின் உயில் அறிக்கை - ஓர் ஆய்வு 20
1.4: தமால கிருஷ்ண கோஸ்வாமியின் முக்கிய வாக்குமூலங்கள் 23
(ஜூலை 9, 1977 ஆணைக்கடிதம் எழுத்தாளர்)

**அத்தியாயம் 2: தத்துவ ரீதியில் ஆதாரங்கள்** 24

2.1: *தீக்ஷை* என்பதன் வரையறை 24
2.2: யார் *தீக்ஷா* குருவாக இருக்க முடியும்? 25
2.2.1: *தீக்ஷா* குருவுக்கான தகுதி 26
2.2.2: *தீக்ஷா* குருவிற்கான அங்கீகாரம் 28
2.3: குரு பரம்பரை புதிர் 29
2.3.1: சீடர்களை ஏற்க *தீக்ஷா* குரு பூத உடலுடன் இருக்க வேண்டுமா? 29
2.3.2: முந்தைய ஆச்சாரியர்களிடமிருந்து நாம் உபதேசம் (*சிக்ஷா*) பெற முடியுமா? 33
2.3.3: ஸ்ரீல பிரபுபாதா குரு-சீடப் பரம்பரை வழக்கத்தை உடைக்கின்றாரா? 33
2.3.4: "ஆனால் ஸ்ரீல பிரபுபாதா முன்பு இவ்வாறு கூறியுள்ளாரே!?" 35
2.4: ஸ்ரீல பிரபுபாதா இஸ்கான்-க்கு *சிக்ஷா* குருவா அல்லது *தீக்ஷா* குருவா? 39

**அத்தியாயம் 3: திசை மாற்றம் - சாத்திர ஆய்வு** 40

3.1: திசை மாற்றம் - காரணங்கள் 41
3.2: திசை மாறிச் சென்றவர்கள் மற்றும் அவர்களை பின்பற்றுபவர்களின் கதி 43
3.3: இந்நிலையை சீர் திருத்துவது எவ்வாறு? 46
3.4: கருத்து வேற்றுமை கொண்டவரை கையாளும் முறை 48

**முடிவுரை** 50

பிற்சேர்க்கை அ: ஸ்ரீல பிரபுபாதாவின் உயில் அறிவிப்புப் பத்தரம் (மறுபதிப்பு) 53
பிற்சேர்க்கை ஆ: தமால கிருஷ்ண கோஸ்வாமியின் வாக்குமூலம் டிசம்பர் 3, 1980 60

# அறிமுகம்

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் தனது முந்தைய ஆச்சாரியர்களிடம் விசுவாசகமாக இருந்து கிருஷ்ண உணர்வை அதனுடைத் தூய வடிவில் பிரச்சாரம் செய்த சக்தி வாய்ந்த ஆச்சாரியார் ஆவார். அதன் காரணமாகவே அவர் கிருஷ்ண உணர்வுப் பிரச்சாரத்தை முன்னெப்போதுமில்லாத அளவில் இட்டுச்சென்றார். கிருஷ்ணருடைய திருநாமம் இவ்வுலகில் உள்ள எல்லா கிராமங்களிலும், நகரங்களிலும் ஒலிக்குமென்ற ஸ்ரீமான் சைதன்ய மஹாபிரபுவின் ஐநூறு வருட தீர்க்கதரிசனத்தை ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் தனி நபராகச் செய்து காட்டினார். இதனைச் சாதிப்பதற்கு அவர் எந்த ஒரு புது யுக்தியையும் உருவாக்கவில்லை; மாறாக சீடப் பரம்பரையின் மூலம் வந்த மறபுகளையே பின்பற்றினார். "மாற்றம் செய்வது என்பது அயோக்கியத்தனம்" என்று பிரபுபாதர் எப்போதும் கூறுவார்.

ஆயினும், சைதன்ய மஹாபிரபுவின் இந்த இயக்கத்தை இக்காலகட்டத்தில் முற்கொண்டு செல்ல தமது ஆன்மிக ஞானத்தைக் கொண்டு இக்காலகட்டத்திற்கேற்ப பல ஆன்மிகமானத் திருத்தங்களை ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் மேற்கொண்டார். ஆயினும் இந்த திவ்யமானத் திருத்தங்களை நாம் சீடப் பரம்பரைக்கு முரணான திருத்தங்களுடன் ஒப்பிட்டு குழப்பிக்கொள்ளக் கூடாது. இவ்விதத்தில் செய்யப்பட்ட ஒரு மாற்றமே ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் அறுபத்து நான்கு முறை ஜபம் செய்ய வேண்டும் என்பதற்கு பதிலாக பதினாறு முறை ஜபிக்க வேண்டுமென்பதாகும். இன்னொன்று, *'ரித்விக்'* முறையில் *தீக்ஷை* அளிக்கப்படுவது.

*தீக்ஷை* என்பது ஒரு தகுதி வாய்ந்த குருவின் வழிகாட்டுதலின் கீழ் ஒருவர் இந்த மனித வாழ்வில் தனது ஆன்மிக வாழ்க்கையைத் துவங்குவற்கான மிக முக்கியமான சீர்திருத்த முறையாகும்.

*ப்ரம்ஹ்மாண்ட ப்ரமிதே கோனே பாக்யவான் ஜீவ*
*குரு-க்ருஷ்ண-ப்ரசாதே பாய பக்தி-லதா-பீஜ*

"தனது கர்மத்திகேற்ப அனைத்து ஜீவராசிகளும் இந்த பிரபஞ்சம் முழுவதும் திரிந்துகொண்டுள்ளன. ... அலைந்து திரிந்து கொண்டுள்ள கோடிக்கணக்கான ஜீவராசிகளுள் **மிக அதிர்ஷ்டசாலியான ஒரு ஜீவாத்மாவுக்கு**, கிருஷ்ணரின் கருணையினால் ஒருத் தகுதி வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட ஆன்மிக குருவுடனான உறவுக் கிடைக்கின்றது. **குரு மற்றும் கிருஷ்ணரது கருணையினால்** அவருக்கு **பக்தி எனும் கொடிக்கான விதை கிடைக்கின்றது**."

\- சைதன்ய சரிதாம்ருதம், மத்திய லீலை 19.151

குருவிற்கான தத்துவம் எப்போதுமே ஒன்றெனும்போதிலும், சாத்திரத்தின்படி குருக்கள் நான்கு வகையாகப் பிரிக்கபடுவர். இவர்கள் அனைவருமே ஒரு பந்தப்பட்ட ஆன்மா, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பாதத்தை அடைய உதவுகின்றனர்.

1. ***வர்த்ம-ப்ரதர்ஷக குரு*** - ஆன்மிக வாழ்க்கையைப் பற்றி முதன்முதலில் போதிக்கும் குரு
2. ***தீக்ஷா-குரு*** - சாத்திர விதிப்படி *தீக்ஷை* அளிக்கும் குரு. அவரே எல்லோரது இதயத்திலும் இருக்கும் *சைத்ய* குருவின் வெளிப்பாடு ஆவார். ஒருவருக்கு ஒரு *தீக்ஷா* குரு மட்டுமே இருக்கமுடியும்.
3. ***சிக்ஷா-குரு*** - *தீக்ஷா* குருவின் உபதேசத்திற்கேற்ப ஒருவரது ஆன்மிக முன்னேறத்திற்கு வழி காட்டும் குரு. ஒருவருக்கு பல *சிக்ஷா*-குருக்கள் இருக்க முடியும்.
4. ***சைத்ய குரு*** - எல்லாரது இதயத்திலும் பரமாத்மாவாக இருந்து கொண்டு, எல்லோரையும் வழி நடத்தும் தலைமையான ஆன்மிக குரு.

சைத்ய குரு முழுமுதற்கடவுளின் விரிவாக்கமாக எல்லோரது இதயத்திலும் இருக்கும் பரமாத்மா ஆவார். மற்ற மூன்று வகையான குருக்களுள் *சிக்ஷா*-குருவும், வர்த்ம-ப்ரதர்ஷக குருவும் *தீக்ஷா* குருவின் கட்டளையின் பேரில் கிருஷ்ண உணர்வைப் பிரச்சாரம் செய்வதில் தத்தமது கடமையைச் முறையாகச் செய்கின்றனர். அவர்கள் தூய பக்தர்களாகவோ, தூய பக்தரல்லாதவர்களாகவோ இருக்கலாம். ஆனால் *தீக்ஷா* குருப் பதவிக்கான பொறுப்புகள் அதிகமாக இருப்பதால், அந்நிலையை அடைய ஒருவர் தூய பக்தராக இருப்பதுடன், அவரது குருவால் அங்கீகரிக்கப்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

இந்த திவ்யமான இயக்கத்தின் வளர்ச்சி தடையற்று செழிக்க, ஸ்ரீல பிரபுபாதா அவர்கள், அவர் தமது உடலை பிரிந்த பிறகும் சீடர்களை ஏற்பதற்காக, *ரித்விக்* எனப் பொருள்படும் தமது பிரதிநிதிகள் மூலம் புதிய பக்தர்களுக்கு தீட்சையளிக்கும் முறையை ஏற்படுத்தினார்.

ஆனால் இன்றையக் காலகட்டத்தில் *ரித்விக்* எனும் இந்த வார்த்தையே இஸ்கான்-ல் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றாகிவிட்டது. அவர்கள் அந்த வார்த்தையையே அசுரத்தனமானது என என்னும் வகையில் மாற்றிவிட்டனர். தன்னை *ரித்விக்* முறையுடன் தொடர்புபடுத்திகொள்ளும் அனைவரையும் அவர்கள் மிக மோசமானக் குற்றவாளியாகவே கருதப்படுகின்றனர். ஆனால், குறிப்பாக, ஸ்ரீல பிரபுபாதா அவர்களிடம் அவர் தனது உடலை விட்டு நீங்கிய பிறகு எவ்வாறு *தீக்ஷை* அளிக்கப்படவேண்டும் என்பது குறித்து வினா எழுப்பப்பட்டபோது அவர் பயன்படுத்திய வார்த்தை *ரித்விக் என்பதாகும்.*

**ஸத்ஸ்வரூபா**: எங்களது அடுத்த கேள்வி என்னவெனில், **எதிர்காலத்தில்**, குறிப்பாக நீங்கள் **எங்களை விட்டு மறைந்தபிறகு**, எவ்வாறு ***தீக்ஷை*** அளிப்பப்படவேண்டும் என்பது குறித்ததாகும். முதல் மற்றும் இரண்டாம் *தீக்ஷை* எவ்வாறு அளிக்கப்படவேண்டுமென அறிந்து கொள்ள நாங்கள் விழைகிறோம்.

**ஸ்ரீல பிரபுபாதா**: ஆம். நான் உங்களில் சிலரை பரிந்துரைப்பேன். இதற்குப்பிறகு நான் உங்களில் சிலரை பிரதிநிதித்துவ ஆச்சாரியராக நியமிப்பேன்.

**தமால கிருஷ்ணா**: அது *ரித்விக்* ஆச்சாரியார் என்று அழைக்கப்படுமா?

**ஸ்ரீல பிரபுபாதா**: ***ரித்விக்***. ஆம்!!

- ஸ்ரீல பிரபுபாதர் அறையில் கலந்துரையாடல், மே 28, 1977.

இந்த *ரித்விக் தீக்ஷை* முறை என்பது ஏதோ ஒரு சில விரக்தியடைந்த பக்தர்களால் உருவாக்கப்பட்ட கற்பனையான முறையல்ல. ஆனால், இந்த முறையானது நம் எல்லோரது நன்மைக்காகவும், ஸ்ரீல பிரபுபாதா அவர்களால் மிகக் கருணையுடன் அளிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

# அத்தியாயம் 1: ஆவண ஆதாரங்கள்

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் இஸ்கான் நிர்வாகம் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களுக்கும், தமது கருத்து தெளிவாக விளங்கும் வகையில் முறையான ஆவணங்களை வெளியிட்டிருந்தார்.

இஸ்கானின் மறுக்கமுடியாத, அதிகாரப்பூர்வமான ஆவணங்களையும், ஒலி நாடாப் பதிவுகளையும் கொண்டு நாம் இந்தப் பகுதியில், ஸ்ரீல பிரபுபாதாவினுடைய மறைவுக்குப் பிறகான *தீக்ஷை* முறைக்கான அவரது நோக்கம் என்ன என்பதைக் காண்போம்.

இந்தப் பகுதியில் நாம் கீழ்கண்ட மூன்று ஆவணங்களைக் குறித்து ஆய்வோம்.

1. மே 28, 1977 உரையாடலின் ஒலிநாடா (எழுத்துப் படிவம்)
2. ஜூலை 9, 1977 - உத்தரவுக் கடிதம்
3. ஸ்ரீல பிரபுபாதரின் உயில் - ஜூன் 5, 1977

## 1.1 : "நியமன ஒலி நாடா" - ஓர் ஆய்வு

மே 28, 1977-ல் ஸ்ரீல பிரபுபாதா அவர்களிடம் நேரடியாகக் கேட்கப்பட்ட ஒரு கேள்வியுடன் நாம் இப்பகுதியைத் தொடங்குவோம். ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் தமக்குப் பிறகான ஆன்மிக வாரிசை இந்த ஒலி நாடாவில் உள்ள கலந்துரையாடல் மூலமாக நியமித்ததாக அவரால் அங்கீகரிக்கபடாத இஸ்கான் குருக்கள் கூறுகின்றனர். ஆகவே இந்த ஒலி நாடாவை அவர்கள் "நியமன ஒலி நாடா" என்றும் அழைக்கிறார்கள். நாம் இந்தக் கலந்துரையாடல் குறித்து இப்போது காண்போம்.

---

## அறைக் கலந்துரையாடல் - விருந்தாவனம், மே 28, 1977

1. **ஸத்ஸ்வரூபா**: எங்களது அடுத்த கேள்வி என்னவெனில், **எதிர்காலத்தில், குறிப்பாக நீங்கள் எங்களை விட்டு மறைந்தபிறகு, எவ்வாறு *தீக்ஷை* அளிப்பப்படவேண்டும்** என்பது குறித்ததாகும். முதல் மற்றும் இரண்டாம் *தீக்ஷை* எவ்வாறு அளிக்கப்படவேண்டுமென அறிந்து கொள்ள நாங்கள் விழைகிறோம்.
2. **ஸ்ரீல பிரபுபாதா**: ஆம். நான் உங்களில் சிலரை பரிந்துரைப்பேன். இதற்குப்பிறகு நான் உங்களில் சிலரை பிரதிநிதித்துவ ஆச்சாரியராக நியமிப்பேன்.
3. **தமால கிருஷ்ணா**: அது *ரித்விக்* ஆச்சாரியார் என்று அழைக்கப்படுமா?
4. **ஸ்ரீல பிரபுபாதா**: *ரித்விக்*. ஆம்!!

5. **ஸத்ஸ்வரூபா**: *தீக்ஷை* அளிப்பவரது உறவு என்ன? மற்றும்...
6. **ஸ்ரீல பிரபுபாதா**: அவரே குரு... அவரே குரு...
7. **ஸத்ஸ்வரூபா**: ஆனால் அவர் உமது பிரதிநிதியாகச் செயல்படுகிறார்.
8. **ஸ்ரீல பிரபுபாதா**: ஆம். அதுவே சம்பிராயம். ஏனென்றால் நான் இருக்கும் போது வேறு ஒருவர் குருவாக முடியாது. ஆகவே, எனது பிரதிநிதியாகவே செயல்படவேண்டும். எனது கட்டளையின் பேரில்.. ஆமார அஞ்ஞாய குரு ஹனா (எனது கட்டளையின் பேரில் குருவாகுங்கள் - ஸ்ரீமான் சைதன்ய மஹாபிரபு - சைதன்ய சரிதாம்ருதம்). ஆனால் எனது கட்டளையின் பேரில்.
9. **ஸத்ஸ்வரூபா**: அப்படியென்றால் அவர்கள் உங்களது சீடர்களாகக் கருதப்பட வேண்டுமா?
10. **ஸ்ரீல பிரபுபாதா**: ஆம். அவர்கள் சீடர்களே.. ஆனால் யார்...
11. **தமால கிருஷ்ணா**: இல்லை. அவர் என்ன கேட்கிறாரென்றால், இந்த *ரித்விக்* ஆச்சாரியர்கள் உங்கள் சார்பாக *தீக்ஷை* அளிக்கிறார்கள். அவர்கள் யாருடைய சீடர்கள்?
12. **ஸ்ரீல பிரபுபாதா**: அவர்கள் அவருடைய சீடர்களே.
13. **தமால கிருஷ்ணா**: அவர்கள் அவருடைய சீடர்களே.
14. **ஸ்ரீல பிரபுபாதா**: யார் *தீக்ஷை* அளிக்கிறார்கள்... அவரது பரம சீடர் (Grand disciple)
15. **ஸத்ஸ்வரூபா**: எங்களது அடுத்த கேள்வி...
16. **ஸ்ரீல பிரபுபாதா**: நான் உங்களுக்குக் கட்டளையிடும் போது நீங்கள் குருவாகலாம். அவர் வழக்கமான குருவாகிறார். அவ்வளவே. பின்னர் அந்த சீடர் எனது சிஷ்யரின் சிஷ்யர் ஆகிறார்.

---

## ஆய்வு

இந்தக் கலந்துரையாடல் முதன்முதலில் நம்மை சிறிது மலைக்கவைப்பதைப் போல் தோன்றலாம். நாம் இப்போது இதன் சரியானக் கண்ணோட்டத்தைப் பெறுவதற்காக இதனை நியாயமான பகுப்பாய்வு செய்வோம். நாம் ஒவ்வொரு வரியாக இதனை ஆய்வோம்.

1. **ஸத்ஸ்வரூபா**: எங்களது அடுத்த கேள்வி என்னவெனில், எதிர்காலத்தில், குறிப்பாக நீங்கள் எங்களை விட்டு மறைந்தபிறகு, எவ்வாறு *தீக்ஷை* அளிப்பப்படவேண்டும் என்பது குறித்ததாகும். முதல் மற்றும் இரண்டாம் *தீக்ஷை* எவ்வாறு அளிக்கப்படவேண்டுமென அறிந்து கொள்ள நாங்கள் விழைகிறோம்.
2. **ஸ்ரீல பிரபுபாதா**: ஆம். நான் உங்களில் சிலரை பரிந்துரைப்பேன். இதற்குப்பிறகு நான் உங்களில் சிலரை பிரதிநிதித்துவ ஆச்சாரியராக நியமிப்பேன்.
3. **தமால கிருஷ்ணா**: அது *ரித்விக்* ஆச்சாரியர் என்று அழைக்கப்படுமா?
4. **ஸ்ரீல பிரபுபாதா**: *ரித்விக்*. ஆம்!!

இங்கே முதல் வரியில் (#1) நேரடியானதொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அதற்கு ஸ்ரீல பிரபுபாதா அவர்களும் இரண்டாம் வரியிலும் (#2), நான்காம் வரியிலும் (#4), தாம் இங்கே ஒரு *ரித்விக்*கைக் குறிப்பதாகத் தெளிவாகக் கூறுகிறார். இந்தக் கலந்துரையாடல், இதற்குப் பிறகு சிறிது குழப்பமானதாகத் தோன்றினாலும், ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் இங்கேயே எந்த விதமான குழப்பத்திற்கும் இடமின்றி "*ரித்விக்*" என்றுத் தெளிவாகக் கூறுகிறார்.

*ரித்விக்* என்ற சொல் மூலம் இங்கே சொல்லப்பட்ட பொருள் என்ன? ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களில் இந்த வார்த்தை பதினேழு வெவ்வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அனைத்து இடங்களிலும் இதன் பொருள் "பூசாரி" எனும் ஒன்றேயாகும். மற்றவரின் சார்பாக ஒரு சடங்கினை செய்பவர் பூசாரி ஆவார். அவருடைய வேலை அந்த சடங்கினைச் செய்வது மட்டுமேயாகும். மிக அதிக அளவிலானத் தகுதியும், பொறுப்பும் கொண்டிருக்கவேண்டிய ஆச்சாரியார் (அல்லது) குருவிலிருந்து இந்த பூசாரி (*ரித்விக்*) வேறுபட்டவர்.

பகவான் கிருஷ்ணருடையத் தூய பக்தராக இருப்பதும், சீடருடைய அறியாமையை அழிக்கும் வகையில் திவ்ய ஞானத்தை அளிப்பதும் ஓர் ஆச்சாரியரின் கடமையாகும். ஸ்ரீல நரோத்தம தாஸ தாகூரர் கூறிய படி *"சக்கு தான தில ஜெய் ஜன்மே ஜன்மே பிரபு செய்"*, ஒரு சீடர் தனது குருவை தனது நித்தியமான எஜமானராக வழிபடுகிறார். ஆனால், ஒரு *ரித்விக்* இந்த நிலையை பெற்றவரில்லை.

5. **ஸத்ஸ்வரூபா:** *தீக்ஷை* அளிப்பவரது உறவு என்ன? மற்றும்...
6. **ஸ்ரீல பிரபுபாதா:** அவரே குரு... அவரே குரு...

இங்கே ஐந்தாவது வரியில் (#5) ஸத்ஸ்வரூபா *ரித்விக்*-க்கும், *தீக்ஷை* பெறுபவருக்குமான உறவைக் குறித்து கேட்கும் போதிலும், அந்தக் கேள்வியை அவர் சரியாக அமைக்கவில்லை. அவர் *தீக்ஷை* அளிப்பவருக்கும், *தீக்ஷை* பெறும் சீடருக்குமான உறவைக் குறித்துக் கேட்டார். இங்கே *தீக்ஷை* அளிப்பவரும், குருவும் ஸ்ரீல பிரபுபாதரே என்பதனை நாம் மிகவும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். *ரித்விக்* என்பவர் குரு அல்ல; வெறும் பிரதிநிதியே. ஆகவே ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் ஆறாவது வரியில் (#6) *தீக்ஷை* அளிப்பவரே அந்தப் புது சீடருக்கு குரு என்று கூறுகிறார்.

7. **ஸத்ஸ்வரூபா:** ஆனால் அவர் உமது பிரதிநிதியாகச் செயல்படுகிறார்.
8. **ஸ்ரீல பிரபுபாதா:** ஆம். அதுவே சம்பிராயம். ஏனென்றால் நான் இருக்கும் போது வேறொருவர் குருவாக முடியாது. ஆகவே, எனது பிரதிநிதியாகவே செயல்படவேண்டும். எனது கட்டளையின் பேரில்.. ஆமார அஞ்ஞாய குரு ஹனா (எனது கட்டளையின் பேரில் குருவாகுங்கள், ஸ்ரீமான் சைதன்ய மஹாபிரபு - சைதன்ய சரிதாம்ருதம்). ஆனால் எனது கட்டளையின் பேரில்...

இங்கே ஏழாவது வரியில் (#7) ஸத்ஸ்வரூபா தான் புரிந்து கொண்டதனைத் தெளிவுபடுத்திக்கொள்கிறார். ஒருவரது குரு உயிரோடு இருக்கும் போது அவரது சீடர் குருவாவது ஒழுக்கமல்ல என எட்டாவது வரியில் ஸ்ரீல பிரபுபாதர் தெளிவுபத்துகிறார். ஒரு *ரித்விக்* தனது குருவின் மறைவினாலே குருவாக ஆவதில்லை, மாறாக பிரபுபாதரின் கட்டளையின் பேரிலேயே ஒரு *ரித்விக்* குருவாக முடியும் என்று அவர் உடனே கூறுகிறார். **எனது கட்டளையின் பேரில்..** இங்கே ஸ்ரீல பிரபுபாதர் எதிர்காலத்தைக் குறித்து பேசுகிறார் என்பது தெளிவாகிறது. அவர் இங்கே யாரையும் குருவாக நியமனம் செய்யவில்லை, மாறாக எதிர்காலத்தைக் குறித்தே பேசுகிறார். ஆகவே இந்த ஒலிநாடாவை "நியமன ஒலி நாடா" என்று அழைக்கமுடியாது.

9. **ஸத்ஸ்வரூபா:** அப்படியென்றால் அவர்கள் உங்களது சீடர்களாகக் கருதப்பட வேண்டுமா?
10. **ஸ்ரீல பிரபுபாதா:** அவர்கள் சீடர்களே... ஆனால் யார்...
11. **தமால கிருஷ்ணா**: இல்லை. அவர் என்ன கேட்கிறாரென்றால், இந்த *ரித்விக்* ஆச்சாரியர்கள் உங்கள் சார்பாக பக்தர்களுக்கு *தீக்ஷை* அளிக்கிறார்கள். அவர்கள் யாருடைய சீடர்கள்?
12. **ஸ்ரீல பிரபுபாதா:** அவர்கள் அவருடைய சீடர்களே.
13. **தமால கிருஷ்ணா**: அவர்கள் அவருடைய சீடர்களே.
14. **ஸ்ரீல பிரபுபாதா:** யார் *தீக்ஷை* அளிக்கிறார்கள்.. அவரது பரம சீடர்கள் (Grand disciple)
15. **ஸத்ஸ்வரூபா:** எங்களது அடுத்த கேள்வி...
16. **ஸ்ரீல பிரபுபாதா:** நான் உங்களுக்குக் கட்டளையிடும் போது நீங்கள் குருவாகலாம். அவர் வழக்கமான குருவாகிறார். அவ்வளவே. பின்னர் அந்த சீடர் எனது சீடரின் சீடராகிறார்.

பத்தாவது வரியை (#10) ஆராயும் போது ஸ்ரீல பிரபுபாதர் ஸத்ஸ்வரூபா-வின் கேள்வியைப் புரிந்து கொள்ளாதது போலத் தெரிகிறது. ஆகவே பதினொன்றாவது (#11) வரியில் தமால கிருஷ்ணா அவரது கேள்வியைத் தெளிவாக்குகிறார். பன்னிரண்டாம்(#12) வரியையும், பதினான்காவது வரியையும் (#14) சேர்த்தால் ஸ்ரீல பிரபுபாதருடைய விடைத் தெளிவாகும். அதாவது **யார் *தீக்ஷை* அளிக்கிறார்களோ அவரது சீடரே** அவர் என்று ஸ்ரீல பிரபுபாதர் கூறுகிறார். அவரது *ரித்விக்* பிரதிநிதிகளின் மூலமாக அந்த சடங்கில், அவரே *தீக்ஷை*

அளிப்பதால் ஸ்ரீல பிரபுபாதரே அந்த சீடருக்குக் குருவாவார். ஆனால் இங்கே பிரபுபாதரின் பதிலுக்கு நடுவில், அதாவது பதிமூன்றாம் வரியில் (#13), தமால கிருஷ்ணா, ஸ்ரீல பிரபுபாதரின் கருத்தை வலியுறுத்துகிறார். ஆகவே ஸ்ரீல பிரபுபாதரின் பதில் இரண்டு வரிகளில் பிரிந்திருப்பதாகத் தோன்றுகிறது.

ஆனால் இங்கே, பதினான்காம் வரியில் (#14) ஸ்ரீல பிரபுபாதர் தமது பரம சீடர் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். பின்னர் ஸத்ஸ்வரூபா பதினைந்தாம் (#15) வரியில் வேறொரு கேள்விக் கேட்க முனைகிறார். ஆனால் ஸ்ரீல பிரபுபாதர் இடைமறித்து தாம் கட்டளையிடும் போதே, ஒருவர் குருவாக முடியும் என்றும் பின்னர் அந்த சீடரது சீடர் தமக்கு பரம சீடராக முடியும் என்றும் தாம் பதினான்காம் வரியில் (#14) கூறிய கருத்தைத் தெளிவாக்குகிறார். பின்னர் அவர், ஒருவர் குருவாவற்கு ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளைக்காகக் காத்திருக்க வேண்டுமென்று கூருவதோடல்லமால், அந்தக் கட்டளைப் பெற்ற குருவை "வழக்கமான குரு" என்றும் அழைக்கிறார். ஆகவே இந்தக் கலந்துரையாடல் நடந்தபோது யாருக்கும் குருவாக ஆவதற்குக் கட்டளையளிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஆகவே இது ஒன்றும் அவர்கள் அழைப்பது போல "நியமன ஒலிநாடா" அல்ல.

## 1.2 : அதிகாரப்பூர்வமான பிரதிநிதிக்களின் (*ரித்விக்*) நியமனம்

இஸ்கானுடைய எதிர்காலத்தை ஸ்ரீல பிரபுபாதர் அவர்கள், இந்தக் குழப்பமானக் கலந்துரையாடலுடன் (மே 28,1977) காற்றில் பறக்கவிடவில்லை. மாறாக இது சம்பந்தமான தெளிவான எழுத்துப்பூர்வமான ஆணைக்கடிதத்தை உலகில் உள்ள அனைத்து இஸ்கான் மையத்திற்கும் அனுப்பி வைத்து, தனது நோக்கத்தைத் தெளிவுபடுத்தினார். நாம் இப்போது ஜூலை 9, 1977-ல் ஸ்ரீல பிரபுபாதர் அவர்கள் அனுப்பிய ஆணைக்கடிதத்தை ஆய்வோம்.

இந்தக் கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது ஆங்கிலத்தில் உள்ள காரணத்தால் அதனுடைய மொழிபெயர்ப்பை நாம் இங்கே இணைத்துள்ளோம். ஆனால் அந்த நகலின் இறுதியில், நாம் முக்கியமாக ஸ்ரீல பிரபுபாதரின் கையொப்பத்தையும், அவரது அப்போதைய செயலாளர் தமால கிருஷ்ண கோஸ்வாமி அவர்களுடைய கொயொப்பத்தையும் காணவேண்டும். இந்த இரண்டு கையொப்பங்களுடன் இந்த ஆவணம் சட்டப்பூர்வமாகிறது. ஆகவே இஸ்கான் நிர்வாகம் இந்தக் கட்டளையை எந்த கேள்விக்கும் இடமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# ஜூலை 9, 1977 கடிதம் (அசல்)

ISKCON

INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS

*Founder-Acharya : His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada*

July 9th, 1977

To All G.B.C., and Temple Presidents

Dear Maharajas and Prabhus,

Please accept my humble obeisances at your feet. Recently when all of the GBC members were with His Divine Grace in Vrndavana, Srila Prabhupad indicated that soon He would appoint some of His senior disciples to act as "rittik" – representative of the acarya, for the purpose of performing initiations, both first initiation and second initiation. His Divine Grace has so far given a list of eleven disciples who will act in that capacity:

His Holiness Kirtanananda Swami
His Holiness Satsvarupa das Gosvami
His Holiness Jayapataka Swami
His Holiness Tamal Krsna Gosvami
His Holiness Hrdayananda Gosvami
His Holiness Bhavananda Gosvami
His Holiness Hamsadutta Swami
His Holiness Ramesvara Swami
His Holiness Harikesa Swami
His Grace Bhagavan das Adhikari
His Grace Jayatirtha das Adhikari

In the past Temple Presidents have written to Srila Prabhupad recommending a particular devotee's initiation. Now that Srila Prabhupad has named these representatives, Temple Presidents may henceforward send recommendation for first and second initiation to whichever of these eleven representatives are nearest their temple. After considering the recommendation, these representatives may accept the devotee as an initiated disciple of Srila Prabhupad by giving a spiritual name, or in the case of second initiation, by chanting on the Gayatri thread, just as Srila Prabhupad has done. The newly initiated devotees are disciples of His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupad, the above eleven senior devotees acting as His representative. After the Temple President receives a letter from these representatives giving the spiritual name or the thread, he can perform the fire yajna in the temple as was being done before. The name of a newly initiated disciple should be sent by the representative who has accepted him or her to Srila Prabhupad, to be included in His Divine Grace's "Initiated Disciples" book.

Hoping this finds you all well.

Your servant,

Tamal Krishna Goswami

Tamal Krsna Gosvami
Secretary to Srila Prabhupad

Approved: A.C. Bhaktivedanta Swami

Shri Krishna Balaram Mandir & International Guest House Bhaktivedanta Swami Marg, Vrindaban, Mathura, (U.P.) India – phone 178.

*Hare Krishna Hare Krishna Krishna Krishna Hare Hare — Hare Rama Hare Rama Rama Rama Hare Hare*

# ஜூலை 9, 1977 கடிதம் (தமிழில்)

இஸ்கான்
அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்
ஸ்தாபக ஆச்சாரியர்: அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

ஜூலை 9, 1977

அனைத்து ஆட்சி குழு ஆணையத்தின் (GBC) உறுப்பினர்களுக்கும், ஆலய நிர்வாகிகளுக்கும்

அன்புள்ள மகாராஜாக்களே, பிரபுக்களே,

எனது பணிவான வணக்கங்களை உங்கள் தாமரைப் பாதங்களில் ஏற்றுக்கொள்ளுங்கள். சில காலங்களுக்கு முன் ஆட்சி குழு ஆணையத்தின் உறுப்பினர்கள், ஸ்ரீல பிரபுபாதருடன் விருந்தாவனத்தில் இருந்தபோது இஸ்கானில் முதல் மற்றும் இரண்டாம் *தீக்ஷை* அளிப்பதற்காக தமது சீடர்களில் சிலரை அவர் ஆச்சர்யரின் பிரதிநிதியாக நியமிப்பதாகக் (*ரித்திக்*) கூறியிருந்தார். ஸ்ரீல பிரபுபாதர் அவர்கள் இது சம்பந்தமாக இதுவரை பின்வரும் 11 பேரை நியமனம் செய்துள்ளார்.

அருட்திரு கீர்தானந்த ஸ்வாமி

அருட்திரு ஸத்ஸ்வரூப தாஸ் கோஸ்வாமி

அருட்திரு ஜெயபதாக ஸ்வாமி

அருட்திரு தமால கிருஷ்ண கோஸ்வாமி

அருட்திரு ஹ்ருதயானந்த கோஸ்வாமி

அருட்திரு பவானந்த கோஸ்வாமி

அருட்திரு ஹம்ஸத்தூத ஸ்வாமி

அருட்திரு ராமேஸ்வர ஸ்வாமி

அருட்திரு ஹரிகேச ஸ்வாமி

அருட்திரு பகவான் தாஸ் அதிகாரி

அருட்திரு ஜெயதீர்த்த தாஸ் அதிகாரி

கடந்த காலத்தில் ஆலய நிர்வாகிகள், ஒரு குறிப்பிட்ட பக்தருக்கு *தீக்ஷை* அளிக்கப் பரிந்துரைத்து ஸ்ரீல பிரபுபாதா அவர்களுக்குக் கடிதம் எழுதி வந்தனர். இந்தப் பதினோறுப் பிரதிநிதிக்களை ஸ்ரீல பிரபுபாதா அவர்கள்

நியமித்துள்ளதால், இப்போதிலிருந்து ஆலய நிர்வாகிகள் இவர்களுள் தங்களுக்கு அருகில் உள்ளப் பிரதிநிதிக்கு முதல் மற்றும் இரண்டாம் *தீக்ஷை*கான தமது பரிந்துரைக் கடிதத்தை அனுப்பலாம். அந்தப் பரிந்துரையை ஆராய்ந்த பின், ஸ்ரீல பிரபுபாதர் ஏற்கனவே செய்த வண்ணம், அந்த சீடரை ஆன்மிகப் பெயர் அளித்தும், இரண்டாம் *தீக்ஷை*யாக இருக்கும் பட்சத்தில் பூணூலில் காயத்ரி மந்திரம் ஜெபித்தும், ஸ்ரீல பிரபுபாதருடைய *தீக்ஷை*யளிக்கப்பட்ட சீடராக அந்தப் பிரதிநிதி ஏற்கலாம். அந்தப் புதிதாக *தீக்ஷை* பெற்ற சீடர் ஸ்ரீல பிரபுபாதருடைய சீடராவார்;அந்த பதினோறு மூத்த பக்தர்களும் அவருடையப் பிரதிநிதிகளாவர். அந்தப் பிரதிநிதிகளிடமிருந்து ஆன்மிகப் பெயர் அல்லது காயத்ரி மந்திரம் ஜெபிக்கப்பட்ட பூணூல் அடங்கிய கடிதத்தைப் பெற்ற பின், அந்த ஆலய நிர்வாகி வழக்கம் போல ஆலயத்தில் அக்னி ஹோமமம் செய்ய வேண்டும். ஸ்ரீல பிரபுபாதாவின் சீடர்களின் பெயர் கொண்ட புத்தகத்தில் சேர்க்கப்படுவதற்காக, ஸ்ரீல பிரபுபாதரை குருவாக ஏற்ற அந்த சீடரது பெயரை பிரதிநிதி அனுப்பி வைக்க வேண்டும்.

இதனைப் பெரும் நீங்கள் நல்லாரோக்கியத்துடன் இருப்பீர்களாக!!!

உங்கள் சேவகன்,

(அசல் ஆவணத்தில் கையொப்பம் உள்ளது)

தமால கிருஷ்ண கோஸ்வாமி

ஸ்ரீல பிரபுபாதரின் செயலாளர்

அங்கீகரிக்கப்பட்டது

(அசல் ஆவணத்தில் ஸ்ரீல பிரபுபாதரின் கையொப்பம் உள்ளது)

## <u>ஜூலை 9, 1977 கடிதம் - ஆய்வு</u>

1. இது இங்கே தெள்ளத் தெளிவாக உறுதியாகிறது. ஸ்ரீல பிரபுபாதரின் நிர்வாக முறை இதுவே ஆகும். மிக முக்கியமான உத்தரவுகள் அனைத்தும் உலகில் உள்ள அனைத்து மையங்களுக்கும் எழுத்துப் பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டன; குழப்பங்களை விளைவிக்கும் தனிப்பட்ட அறைக்கலந்துரையாடல்கள் மூலம் அல்ல.

2. ஸ்ரீல பிரபுபாதர் அவர்கள், விருந்தாவனத்தில், ஆட்சிக் குழு ஆணைய உறுப்பினர்களுடன் தகுந்த *தீக்ஷை* முறை குறித்துக் கலந்துரையாடியதைப் பற்றி, தமால கிருஷ்ண கோஸ்வாமி அவர்கள் இக்கடிதத்தின் முதல் பத்தியில் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும். இது மே 28, 1977-ல் நடந்த கலந்துரையாடலைக் குறித்ததாகும். ஆகவே அந்தக்கலந்துரையாடலுக்கு நாம் அளித்தத் தெளிவான விளக்கத்தைப் படித்த பிறகும், உங்களுக்கு அதில் ஏதேனும் சந்தேகமோ, குழப்பமோ இருந்தால், இக்கடிதத்தைப் படிப்பதன் மூலம் அந்தக் கலந்துரையாடலின் பொருளை நீங்கள் தெளிவாக்கிக்கொள்ளலாம். இக்கடிதம் நேரடியாக அந்தக் கலந்துரையாடலைக் குறிக்கிறது.

3. அது மட்டுமல்லாது, மே 28-ல் நடந்த அந்தக் கலந்துரையாடல் எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டதென்பதையும் நாம் நினைவுகூற வேண்டும். "**எதிர்காலத்தில், குறிப்பாக நீங்கள் எங்களை விட்டு மறைந்தபிறகு**" என்ற வாக்கியத்தை நினைவு கூறுங்கள். ஆகவே இந்த ஒட்டு மொத்த விவாதமுமே ஸ்ரீல பிரபுபாதரின் பூத உடல் மறைவுக்கு அப்பாற்பட்ட காலத்தைக் குறித்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிப் போலத் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே இந்தக் கடிதத்தை படிக்கும் போது, நாம் இதனை நினைவில் கொள்ளுதல் அவசியம்.

4. ஸ்ரீல பிரபுபாதா அவர்கள், தமது ஆச்சரியப் பிரதிநிதியாகிய "*ரித்திக்*" - ஐ (*ரித்விக்* என்பதன் பெங்காலி உச்சரிப்பு) நியமிக்கப் போகிறார் என்று இக்கடிதம் துவக்கப்படுகிறது. இங்கே அவர் யாரையும் குருவாக நியமனம் செய்யவில்லை என்பது தெளிவாகிறது. இதை விடத் தெளிவாக ஸ்ரீல பிரபுபாதர் தனது கருத்தைக் கூறியிருக்க முடியாது.

5. அடுத்ததாக, ஸ்ரீல பிரபுபாதர் இந்த பதினோரு பேரையும் குருவாக நியமிக்கவில்லை என்பதனைத் தெளிவுபடுத்தும் வகையில், இக்கடிதத்தில் அந்த பதினோரு நபர்களும் *ரித்விக்*-காக செயல்படுவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

6. இக்கடிதத்தில், பதினோரு பிரதிநிதிக்களின் பெயர்கள் அடங்கியப் பகுதியின் கீழே அடுத்த முக்கியமானத் தகவல் உள்ளது. "**இப்போதிலிருந்து**" எனும் அவ்வார்த்தை இது குறித்த அடுத்த உத்தரவு வரும்வரை இதுக் காலவரையற்ற உத்தரவு என்பதைக் குறிக்கிறது. ஆனால், ஸ்ரீல பிரபுபாதர் தனது மறைவுக்குப் பிறகு இந்தப் பதினோரு பேரும் தானாகவே குருவாகிவிடுவார்கள் என்பது போன்ற உத்தரவை எங்கேயும் அளிக்கவில்லை. மேலும், நாம் "இப்போதிலிருந்து" எனும் இந்த வார்த்தையை மே 28-ல் நடந்த கலந்துரையாடலில் ஸத்ஸ்வரூபா

மகாராஜா குறிப்பிட்ட **"எதிர்காலத்தில், குறிப்பாக நீங்கள் எங்களை விட்டு மறைந்தபிறகு"** என்ற பொருள்படும்படிப் புரிந்துகொள்ள வேண்டும்.

7. அடுத்ததாக, ஆலய நிர்வாகிகள், **தங்களுக்கு அருகில் உள்ள பிரதிநிதிகளுள் ஒருவருக்கு** *தீக்ஷைக்கான பரிந்துரையை* அனுப்பிவைக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. **அருகில்** என்ற வார்த்தை நிர்வாக வசதிக்கு ஏதுவாக இருக்கும் வண்ணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது; மாறாக இதற்கும் நம்பிக்கையின் அடைப்படையிலான குரு-சிஷ்ய உறவுக்கும் எந்தவொருத் தொடர்புமில்லை. பிற்சேர்க்கை ஆ-ல் உள்ளபடி, தமால கிருஷ்ண மகாராஜா 1980-ல் அளித்த வாக்குமூலத்தில் அவர் இக்கருத்தைத் தாமே பின்வருமாறு விளக்குகிறார்.

"அருகில் எனும் இவ்வார்த்தை இங்கே மிக முக்கியமானதாகும். ஏனென்றால் *தீக்ஷை* என்பது வசதியையைப் பொறுத்ததல்ல; மாறாக ஒருவரது மனத் திருப்தியைப் பொறுத்தது. நமக்கு யார் மீது பூரண நம்பிக்கை இருக்கிறதோ, நாம் அவரையே குருவாக ஏற்றுக்கொள்வோம். ஆனால் இங்கே பிரதிநிதிக்களின் மூலம் *தீக்ஷை* அளிக்கப்பட்டதால், அருகில் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீல பிரபுபாதர் இதனைத் தெளிவாகக் கூறியுள்ளார். அவர் சில பக்தர்களின் பெயர்களை அறிவித்திருந்தார். அவர்களும் உலகம் முழுவதும் பரவியிருந்தனர். ஆகவே அவர் 'உங்களுக்கு அருகிலுள்ள ஒருவரை அணுகுங்கள்; அவர் உங்களது பரிந்துரையை பரிசீலிப்பார் என்று கூறினார். பின்னர், எனது சார்பாக, அவர் உங்களுக்கு *தீக்ஷை* அளிப்பார்"

8. கடிதத்தின் அடுத்தப் பத்தியில் ஸ்ரீல பிரபுபாதர், தமது *ரித்விக்* பிரதிநிதிக்களை நியமனம் செய்ய விழைந்ததும், அவரே இந்த இயக்கத்தின் *தீக்ஷா* குரு என்பதும் தெளிவாகும் வகையில் கீழ்கண்ட வாக்கியங்களைக் கூறியுள்ளார்.

அ. "…. ஸ்ரீல பிரபுபாதருடைய *தீக்ஷை*யளிக்கப்பட்ட சீடராக அந்தப் பிரதிநிதி ஏற்கலாம்"

ஆ. "அந்தப் புதிதாக *தீக்ஷை* பெற்ற சீடர் ஸ்ரீல பிரபுபாதருடைய சீடராவார்."

இ. "….ஸ்ரீல பிரபுபாதரை குருவாக ஏற்ற அந்த சீடரது பெயரை பிரதிநிதி அனுப்பி வைக்க வேண்டும்."

ஈ. ஸ்ரீல பிரபுபாதாவைக் குருவாக ஏற்ற சீடர்களின் பெயர் கொண்ட புத்தகத்தில் சேர்க்கப்படுவதற்காக.."

9. இந்தப் பதினோரு பேரும் இறந்த பிறகோ அல்லது தமது நிலையிலிருந்து வீழ்ந்த பிறகோ என்னவாகும் எனும் கேள்வி நம்முள் எழலாம். அதற்குத் **“தேவைக்கேற்ப, மற்றவர்களும் பிரதிநிதிக்களாகச் சேர்க்கப்படலாம்”** என ஸ்ரீல பிரபுபாதர் கூறியதாக தமால கிருஷ்ண மகாராஹா தமது வாக்குமூலத்தில் கூறுகிறார்.

ஸ்ரீல பிரபுபாதர் *ரித்விக்* பிரநிதித்துவ முறையை நிறுவினார் என்பதற்கும், அவரே இந்த இயக்கத்தின் வருங்கால சீடர்கள் அனைவருக்கும் குரு என்பதற்கும், இக்கடிதம் ஒரு ஆணித்தரமான ஆதாரம் ஆகும்.

## 1.3 : ஸ்ரீல பிரபுபாதாவின் உயில் அறிக்கை - ஓர் ஆய்வு

ஸ்ரீல பிரபுபாதரின் உயில் இதற்கு மற்றுமொரு ஆதாரமாக உள்ளது. அவரது உயில் மிகவும் பெரியதாக இருப்பதால் முழு உயிலையும் காட்டுவற்கு பதிலாக ஸ்ரீல பிரபுபாதரே இவ்வியக்கத்தின் *தீக்ஷா* குரு எனும் உண்மையை நிறுவ உதவும் பகுதியை மட்டும் கீழே குறிப்பிட்டுள்ளோம். முழு உயிலையும் படிக்க விரும்புபவர்கள் பிற்சேர்க்கை அ -ஐப் பார்க்கவும்.

1. **ஆட்சி குழு ஆணையமே (GBC - Governing Body Commission) ஒட்டு மொத்த அகில உலகக் கிருஷ்ண பக்தி இயக்கத்தின் (இஸ்கான்) உச்ச கட்ட நிர்வாக அமைப்பாகும்.**

    a. இப்போது நாம் அ எனும் நபர் ஒரு ஆலய நிர்வாகி என்றும், ஆ எனும் நபர் அந்த ஆலயம் அமைந்துள்ளப் பகுதியின் ஆட்சி குழு ஆணையப் பிரதிநிதி என்றும், இ என்பவர் அந்த ஆலய நிர்வாகியின் குரு என்றும் கொள்வோமாக. இப்போது ஆ எனும் நபரின் ஆலோசனையும், இ என்பரின் ஆலோசனையும் ஒத்துப் போகாத ஒரு சூழலில், உண்மையான சீடரென்ற முறையில் நபர் அ, தமது குருவாகிய நபர் இ அவர்களது ஆலோசனையையே ஏற்பார். ஆனால் இது ஸ்ரீல பிரபுபாதரின் ஆணைக்கெதிரானது. ஏனென்றால் ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் ஆட்சி குழு ஆணையமே உச்சகட்ட நிர்வாக அதிகாரம் பெற்றதென்றும், அதனைத் தவிர வேறு எவருமில்ல என்றும் கூறியுள்ளார்.

    b. நாம் இப்போது இஸ்கானில் பின்பற்றப்படும் *தீக்ஷை* முறையை கருத்தில் கொள்ளும் போது, இந்த சூழலில் ஒருவர் தமது குருவையோ அல்லது ஸ்ரீல பிரபுபாதாவையோ நிந்திக்கும் சூழலுக்கு பலவந்தமாகத் தள்ளப்படுகிறார். ஆனால் ஒருவர் ஸ்ரீல பிரபுபாதர் பரிந்துரைத்த *ரித்விக்* எனும் பிரதிநிதித்துவ *தீக்ஷை* முறையைப் பின்பற்றும் போது எந்த முரண்பாடும் இல்லை.

2. **எல்லா ஆலயங்களுமே இஸ்கானின் சொத்தாகும். அவை மூன்று நிர்வாக இயக்குனர்களால் நிர்வகிக்கப்படவேண்டும். நிர்வாக முறையானது இப்போதுள்ளபடியே நடக்கவேண்டும். இதனை மாற்றம் செய்ய எந்த அவசியமுமில்லை.**
   a. குரு எனும் ஒரு நபரை அறிமுகம் செய்வதென்பது ஒரு பெரிய மாற்றமாகும். அது பிரபுபாதரின் கட்டளைக்கு எதிரானது.
   b. இந்த அங்கீகரிக்கபடாத மாற்றத்தால் பக்குமில்லாத பல குருமார்கள் தமது சீடர்களைக் கட்டுப்படுத்தி, அவர்கள் ஆலய நிர்வாகத்துக் கட்டுபடாத வண்ணம் செய்துள்ளனர். இவ்வகையில் இஸ்கான் தனது வரலாற்றில் பற்பல நிர்வாகப் பிரச்சனைகளை சந்தித்துள்ளது. இக்காரணத்தால் ஆலய நிர்வாகம் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றது.
   c. மேலும், அத்தகைய மாற்றம் 1975-ல் நடந்த ஆட்சி குழு ஆணைய சந்திப்பின் நிமிடாந்திர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள "ஆட்சி குழு ஆணையம்" என்பதற்கான வரையறையிலிருந்து முரண்பட்டதாகும்.

   "ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் ஸ்தாபகராகவும், உச்சகட்ட அதிகாரியாகவும் இருந்து நிர்வகித்து வரும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை (இஸ்கான்) நிர்வகிக்கவும், வழிநடத்திச் செல்லவும் அவரின் அங்கீகாரம் பெற்ற "ஆட்சி குழு ஆணையம்" அவரால் உருவாக்கப்படுகிறது. ஆட்சி குழு ஆணையம், அவரது திவ்ய உபதேசங்களை தனது ஆதாரமாக ஏற்பதுடன், அது எல்லாவகையிலும் அவரது கருணையைச் சார்ந்து இருப்பதனையும் ஆமோதிக்கிறது. **ஸ்ரீல பிரபுபாதர் அளித்த திவ்ய உபதேசங்களை செயல்படுத்துவதைத் தவிர ஆட்சி குழு ஆணையத்திற்கு வேறு எந்தக் கடமையுமில்லை.** அதுமட்டுமல்லாமல் அவரது போதனைகளை பாதுகாத்து, அதனை அதன் தூய வடிவில் உலகம் முழுவதும் பரப்புவதும் அதன் நோக்கமாகும்."

   - "ஆட்சி குழு ஆணையத்தின்" வரையறை, தீர்மானம் 1, ஆட்சி குழு ஆணைய நிமிடாந்திர அறிக்கை, 1975

3. இந்த உயிலின் மூன்றாவது பகுதியில் (Point 3), இந்தியாவிலுள்ள அனைத்து சொத்துக்களும் மூன்று நிர்வாக இயக்குனர்களால் நிர்வகிக்கப்படுமென்றும், அந்த சொத்துக்களின் விவரமும், அதன் நிர்வாக இயக்குனர்களின் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீல பிரபுபாதர் கூறுகிறார்: **"இந்த நிர்வாக இயக்குனர்கள் தமது வாழ்நாள் முழுவதற்குமாக**

**நியமிக்கப்படுகின்றனர். நிர்வாக இயக்குனர்களின் மரணமோ அல்லது தத்தமது கடமையைச் செய்யமுடியாத சூழலோ உருவானால் எஞ்சியுள்ள நிர்வாக இயக்குனரால்/ இயக்குனர்களால், புதிய நிர்வாக இயக்குனரோ/இயக்குனர்களோ நியமிக்கப்படலாம். ஆனால், அந்த நிர்வாக இயக்குனர் எனது புத்தகங்களில் நான் கூறியுள்ளபடி, இஸ்கானது அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றும் எனது *தீக்ஷ* பெற்ற சீடராக இருக்கவேண்டும்.** அதுமட்டுமல்லாது அந்த நிர்வாக இயக்குனர்களின் எண்ணிக்கை, மூன்றுக்குக் குறைவாகவோ, ஐந்துக்கு அதிகமாகவோ இருக்கக்கூடாது."

a. ஸ்ரீல பிரபுபாதரிடம் நேரடியாகத் *தீக்ஷ* வாங்கிய ஒரு சீடர் 2050-ம் ஆண்டு அளவில் இருப்பதற்கான வாய்ப்பில்லை. அந்த சூழ்நிலையில் இயக்கத்தின் சொத்துக்களுக்கு யார் நிர்வாகியாக முடியும்? இதற்கான ஒரே ஒரு வழி வருங்காலத்தில் அனைத்து சீடர்களுமே, ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் ஏற்படுத்திய, *ரித்விக்* முறையிலான பிரநிதித்துவ முறையில் *தீக்ஷ* பெறுவதேயாகும்.

b. 1977, ஜூன் 2-ம் தேதி கிரிராஜ ஸ்வாமி இந்த உயிலின் வரைவை ஸ்ரீல பிரபுபாதரிடம் படித்தக் காட்டிய போது, அந்த வரைவில் இருந்த வார்த்தை "**ஒரு *தீக்ஷ* பெற்ற சீடர்**" என்பதாகும். ஆனால் இறுதி உயில் ஆவணத்தில் இடம்பெற்றிருந்த வார்த்தை **"எனது *தீக்ஷ* பெற்ற சீடர்"** என்பதாகும். இதன் மூலம் இந்த மாற்றம் ஸ்ரீல பிரபுபாதா அவர்களாலே ஏற்படுத்தப்பட்டது என்பதுத் தெளிவாகிறது.

ஸ்ரீல பிரபுபாதரின் உயிலின் நோக்கமும், ஜூலை 7, 1977 உத்தரவுக் கடிதத்தின் நோக்கமும், மே 28, 1977 கலந்துரையாடலின் நோக்கமும் ஒன்றாக இருப்பதை நாம் இங்கே தெளிவாகக் காணமுடிகின்றது. *ரித்விக்* பிரதிநிதித்துவ *தீக்ஷ* முறையையே அவர் ஏற்படுத்தினார் என்பதும், அம்முறையின் மூலம் அவர் தமது உடல் மறைவுக்குப் பிறகும் இஸ்கான் இயக்கத்தின் *தீக்ஷா* குருவாக விளங்குகிறார் என்பதும் இங்கே தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

## 1.4 : தமால கிருஷ்ண கோஸ்வாமியின் முக்கிய வாக்குமூலங்கள் (ஜூலை 9, 1977 ஆணைக் கடிதம் எழுத்தாளர்)

1. 1977, ஏப்ரல் 22-ம் தேதி, தமால கிருஷ்ண கோஸ்வாமி ஸ்ரீல பிரபுபாதரிடம் "நான் என்னையும், உங்களது மற்ற சீடர்களையும் ஆய்ந்த போது, நாங்கள் அனைவருமே பந்தப்பட்ட ஆன்மாக்கள் என்பதுத் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே எங்கள் யாருக்கும் குருவாகும் தகுதி இல்லை." என்று கூறினார்.
2. 1980, டிசம்பர் 3-ம் தேதி, தமால கிருஷ்ண கோஸ்வாமி தனது வாக்குமூலத்தில் பின்வருமாறுக் கூறுகிறார்: "**உண்மையாக, ஸ்ரீல பிரபுபாதர் யாரையுமே குருவாக நியமிக்கவில்லை. [...] அவர் பதினோரு *ரித்விக்* பிரதிநிதிக்களை மட்டுமே நியமித்தார்.** அவர் அந்தப் பிரதிநிதிக்களை குருவாக நியமிக்கவில்லை. பிரதிநிதிகள் நியமனத்தை, குரு நியமனமாக மாற்றியதன் மூலம் நானும், மற்ற ஆட்சி குழு ஆணைய உறுப்பினர்களும் இந்த இயக்கத்திற்கு மாபெரும் பாதகத்தை கடந்த மூன்று ஆண்டுகளாகச் செய்துவிட்டோம்." நாம் இங்கே இந்த வாக்குமூலத்தின் ஒரு சிறு பகுதியைப் பற்றி மட்டுமே பார்த்தோம். முழு வாக்குமூலமும் இந்த நூலின் பிற்ச்சேர்க்கை ஆ - ஆக இணைக்கப்பட்டது. நீங்கள் அந்த வாக்குமூலத்தை முழுவதும் படித்தால் அதில் தமால கிருஷ்ண கோஸ்வாமி, ஸ்ரீல பிரபுபாதா யாரையும் குருவாக நியமிக்கவில்லை என்ற கருத்தை வலியுறுத்துவது தெளிவாகும்.

# அத்தியாயம் 2: தத்துவ ரீதியில் ஆதாரங்கள்

இதுவரை எவ்வித சந்தேகத்திற்கும் இடமளிக்காத வகையில் பல்வேறு சட்டப்பூர்வமான பத்திரங்கள் மற்றும் அதிகாரப்பூர்வமான ஒலிநாடா எழுத்துப் படிவங்களையும் நாம் ஆராய்ந்தோம். இப்பொழுது, குரு-தத்துவத்தின் நியமத்தை சாத்திர மற்றும் தத்துவ ரீதியாக காண்போம். அதன்மூலமாக, யார் ஒருவர் உண்மையான குருவாக விளங்க முடியும், யாருக்கு அதற்கான தகுதி இல்லை மற்றும் 1977-க்கு பின் இஸ்கான்-இல் *தீக்ஷை* தொடர்பான ஸ்ரீல பிரபுபாதாவின் கட்டளைகளை தெளிவாக புரிந்துக்கொள்வோம்.

## 2.1 : *தீக்ஷை* என்பதன் வரையறை

*"தீக்ஷா"* எனும் சமஸ்கிருதச் சொல் 'தி' மற்றும் 'க்ஷ' என்ற இரு எழுத்துக்களின் கலவை. 'தி' என்பது திவ்ய-ஞானத்தையும், 'க்ஷ' என்பது *க்ஷபவதி* அதாவது பாவ விளைவுகளை அழிப்பது என்றும் பொருள்படும். (ஸ்ரீமத் பாகவதம் 4.24.61 மற்றும் சைதன்ய சரிதாம்ருதம் அன்த்ய லீலா 3.62-வில் ஸ்ரீல பிரபுபாதர் மொழிப்பெயர்த்தபடி). ஆகவே, *தீக்ஷை* என்பது திவ்ய ஞானத்தை அளித்து அதன் மூலம் பாவ விளைவுகளை அழிப்பதென்று பொருள். பின்வரும் ஸ்லோகங்கள் '*தீக்ஷா*' எனும் சொல்லின் மேற்கூறிய பொருளைச் சுட்டிக்காட்டுகின்றன.

*திவ்யம் ஞானம் யதோ தத்யாத் கூர்யாத் பாபஸ்ய ஸங்க்ஷயம்*
*தஸ்மாத் தீக்ஷேதி ஸா ப்ரோக்தா தேஸிகைஸ் தத்வ-கோவிதை*

"*தீக்ஷை* என்பது ஒருவன் தனது ஆன்மிக திவ்ய ஞானத்தை எழுப்பி தனது பாவ விளைவுகளை அழிக்கும் செயல்முறையாகும். வேதங்களை நன்கு கற்றறிந்த ஒரு வேத விற்பன்னனுக்கு இந்த *தீக்ஷை*யின் பொருள் இதுவே என்று புரியும்."

- ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியின் பக்தி சந்தர்பம் - 283 (சைதன்ய சரிதாம்ருதம் மத்ய லீலை 15.108-ல் மேற்கோள் காட்டப்பட்டபடி)

*தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஷ்னேன ஸேவயா*
*உபதேக்ஷ்யந்தி தே க்ஞானம் க்ஞானினஸ் தத்த்வ-தர்ஷின:*

"ஆன்மீக குருவை அணுகி உண்மையை அறிய முயற்சி செய். அடக்கத்துடன் அவரிடம் கேள்விகள் கேட்டு அவருக்குத் தொண்டு செய். உண்மையைக் கண்டவர்களான **தன்னுணர்வு பெற்ற ஆத்மாக்கள் உனக்கு ஞானத்தை அளிக்க முடியும்.**"

- பகவத் கீதை உண்மையுருவில் 4.34

*யதைதாம்ஸி ஸமித்தோ (அ)க்னிர் பஸ்ம-ஸாத் குருதே (அ)ர்ஜுன*
*க்ஞானாக்னி: ஸர்வ-கர்மாணி பஸ்ம-ஸாத் குருதே ததா*

"கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு விறகை சாம்பலாக்குவதைப் போல, அர்ஜுனா, **ஞான நெருப்பானது ஜடச் செயல்களின் விளைவுகளை எல்லாம் சாம்பலாக்கி விடுகின்றது.**"

- பகவத் கீதை உண்மையுருவில் 4.37

*ஓம் அக்ஞான - திமிராந்த ஸ்ய க்ஞானாஞ்ஜன - ஷலாகயா*
*சக்ஷுர் உன்மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீ - குரவே நம:*

"நான் **அறியாமையின் இருளில்** பிறந்தவன், எனது கண்களை **ஞான ஒளியால் திறந்த எனது ஆன்மீக குருவிற்கு** எனது வணக்கங்களைச் சமர்பிக்கிறேன்."

– பகவத் கீதை உண்மையுருவில் (அறிமுகம்)

*சக்கு-தான் திலோ ஜெய், ஜன்மே ஜன்மே பிரபு சேய்*
*திவ்ய ஞான் ஹ்ர்தேப்ரோகாசிதோ*
*பிரேம-பக்தி ஜாஹா ஹோய்தே, அவித்யா விநாஸ ஜாதே*

"எனக்கு ஞானக் கண்ணை பரிசாகக் கொடுத்த அவரே எனது பிறவிதோறும் குருவாவார். அவரின் கருணையால் தான் **தெய்வீக அறிவானது இதயத்திலிருந்து வெளிப்பட்டிருக்கிறது, அது அறியாமையை அழித்து** பிரேம பக்தியைக் கொடுக்கிறது."

– நரோத்தம தாஸ தாக்கூரரின் ஸ்ரீ குருவந்தனம், பத்தி 3

ஆக, தன்னையறிந்த ஒரு குருவிடமிருந்து சீடன் திவ்ய ஞானத்தை பெறும்போதே *தீக்ஷை* என்பது நிகழ்வதுடன், ஒருவனுடைய பாவ விளைவுகளும் நிர்மூலமாகிறது. *தீக்ஷை*யின் போது நிகழும் பெயர் சூட்டும் சடங்கு ஒரு அத்தியாவசியமான சம்பிரதாயமானாலும் கூட, அதை குருவின் சார்பில் பிற *ரித்விக்*- கள்(பிரதிநிதிகள்) நடத்தி வைக்கலாம். இஸ்கான்-இல் உள்ள அனைத்து பக்தர்களுமே ஸ்ரீல பிரபுபாதா எழுதிய புத்தகங்களின் வாயிலாகவே திவ்ய ஞானத்தை பெறுகின்றனர். ஆகவே ஸ்ரீல பிரபுபாதாவே நம் அனைவருக்கும் *தீக்ஷா* குரு ஆகிறார்.

## 2.2 : யார் *தீக்ஷா* குருவாக இருக்க முடியும்?

ஒருவர் *தீக்ஷை* வழங்கும் ஆன்மீக குருவாகத் திகழ்வதற்கு பின்வரும் இரண்டு நிபந்தனைகள் உள்ளன:

1. முதலாம் தர பக்தனின் குணங்களைக் கொண்டிருக்க வேண்டும்
2. ஒருவர் தமது ஆன்மீக குருவால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்

ஒருவர் தூய பக்தராக விளங்குவதே குருவாக ஆவதற்கு அடிப்படைத் தகுதி ஆகும். ஆனால் அதனால் மட்டுமே அவர் ஒரு *தீக்ஷா* குருவாக ஆகிவிட முடியாது. அவரது குரு அவருக்கு அதிகாரம் வழங்கினால் மட்டுமே, அவர் நடைமுறையில் *தீக்ஷா* குருவாக ஆகமுடியும். ஆகவே ஒருவர் குருவாவதற்கு அவருடைய குரு கட்டளையிட்டிருந்தால், அவர் ஒரு தூய பக்தர் என்பது தெளிவாக அறியப்படும். ஏனெனில், தூய பக்தனாய் விளங்குவதே குருவாவதற்கு அடிப்படைத் தகுதியாகும். இத்தகுதியை பற்றி நாம் இப்பொழுது தத்துவ மற்றும் சாத்திர ரீதியாக அலசி ஆராய்வோம். இதற்கு நாம் வேத இலக்கியங்களில் உள்ள வரிகள் மற்றும் ஸ்ரீல பிரபுபாதாவின் மேற்கோள்களைப் பார்ப்போம்.

## 2.2.1: *தீக்ஷா* குருவுக்கான தகுதி

ஒரு முதலாம் தர பக்தரே அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீக குரு ஆவார். பக்தர்கள் மூன்று தரமாகப் பிரிக்கப்படுகின்றனர். அவற்றில் ஆன்மீக குரு முதலாம் தரத்தை சார்ந்திருத்தல் அவசியம். முதலாம் தர பக்தரின் குணங்களை நாம் கீழ்கண்டவாறு அறியலாம்:

*ஸர்வ-பூதேஷு ய: பஸ்யேத் பகவத்-பாவம் ஆத்மன:*
*பூதானி பகவதி ஆத்மனி ஏஷ பாகவதோத்தம:*

ஸ்ரீ ஹவிர் கூறினார்: “மிகவும் முன்னேற்றமடைந்த பக்தன், எல்லா ஆத்மாக்களுக்கும் ஆத்மாவாகிய பரமபுருஷர் அனைத்திலும் இருப்பதைப் பார்க்கிறான். இதன்விளைவாக அவன் அனைத்தையும் பரமபுருஷருடன் சம்பந்தப்படிருப்பதாகவே பார்த்து, அனைத்தும் பகவானிலேயே என்றும் உறைகின்றன என்பதைப் புரிந்து கொள்கிறான்.”

- ஸ்ரீமத் பாகவதம் 11.2.45

*ஸர்வ-பூத-ஸ்தம் ஆத்மானம் ஸர்வ-பூதானி சாத்மனி*
*ஈக்ஷதே யோக-யுக்தாத்மா ஸர்வத்ர ஸம-தர்ஷன:*

“உண்மையான யோகி, என்னை எல்லா உயிர்களிலும், என்னில் எல்லா உயிர்களையும் காண்கிறான். உண்மையில், தன்னுணர்வுடையவன் பரம புருஷரான என்னையே எங்கும் காண்கிறான்.”

— பகவத் கீதை 6.29

“நம்பிக்கையின் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், பக்தித் தொண்டின் சாத்திரங்களை நன்றாக அறிந்தவன் திடமான நம்பிக்கையை அடைகிறான். அவன் முதல் நிலை பக்தன் என்று அழைக்கப்படுகிறான். இரண்டாம் வகுப்பினர், பக்தி சாத்திரங்களைப் புரிந்துகொள்வதில் அவ்வளவு தேறாவிட்டாலும், கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வதே (கிருஷ்ண பக்தியே) சிறந்தது என்னும் கருத்தில்

இயற்கையாகவே உறுதியான நம்பிக்கையுடன் செயல்படுவர். இவர்கள் மூன்றாம் வகுப்பினரைவிட உயர்ந்தவர்கள். மூன்றாம் வகுப்பினரிடம் சாத்திரங்களின் பக்குவ ஞானமோ, நல்ல நம்பிக்கையோ இல்லை, ஆனால் பக்தர்களின் சங்கத்தினாலும் எளிமையான மனதினாலும் பக்தித் தொண்டினைப் பின்பற்ற முயற்சி செய்கின்றனர். **கிருஷ்ண பக்தியில் மூன்றாம் நிலையில் இருப்பவன், வீழ்ச்சியடைவதற்கு வாய்ப்புள்ளது, ஆனால் இரண்டாம் நிலையில் இருப்பவன் வீழ்ச்சியடைவதில்லை, முதல் நிலை கிருஷ்ண பக்தன் வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்பே இல்லை.**"

— பகவத் கீதை 9.3, பொருளுரை

ஒரு உண்மையான குரு எக்காலத்திலும் தன்னுடைய பக்தித் தளத்திலிருந்து வழுவி வீழ்ச்சியடைந்து, பக்தி சாராத, பாவகரமான அல்லது பௌதிக செயல்களில் ஈடுபடுவதில்லை.

"பேச்சின் தூண்டுதல், மனதின் கோரிக்கைகள், கோபத்தின் செயல்கள் மற்றும் நாக்கு, வயிறு, பாலுறுப்பு ஆகியவற்றின் தூண்டுதல்களை பொறுத்துக் கொள்ளக்கூடிய நிதான புத்தியுள்ள ஒருவர் உலக முழுவதிலும் *வாசோ-வேகம்*

*மனஸ: க்ரோத-வேகம்*
*ஜிஹ்வா-வேகம் உதரோபஸ்த-வேகம்*
*ஏதான் வேகான் யோ விஷஹேத தீர*
*ஸர்வாம் அபீமாம் ப்ருதிவீம் ஸ சிஷ்யாத்*

சீடர்களை ஏற்கும் தகுதி வாய்ந்தவராவார்."

— ஸ்ரீ உபதேசாமிருதம் 1 (Nectar of Instruction 1)

*மஹா-பாகவத-ஷ்ரேஷ்டோ*
*ப்ராஹ்மணோ வை குரூர் ந்ருணாம்*

"குருவானார் பக்தி சேவையின் மிக உயர்ந்த தளத்தில் இருத்தல் அவசியம். மூன்று தரமான பக்தர்கள் இருந்தாலும் கூட முதலாம் தர பக்தர் மட்டுமே குருவாக ஏற்க்கப்பட வேண்டும். முதலாம் தர பக்தர் எல்லா வகையான மக்களுக்கும் ஆன்மிக குருவாவார்.

- பத்ம புராணம் (சைதன்ய சரிதாம்ருதம், மத்ய லீலா 24.330-ன் பொருளுரை)

"ஒருவர் மிகவும் உயர்ந்த தளமாகிய மஹா-பாகவத நிலையை அடையும் போது, அவரை குருவாக ஏற்று, முதற்கடவுளாகிய ஹறிக்கு இணையாக வழிபட வேண்டும். அப்பேர்பட்ட நபர் மட்டுமே குருப் பதவியை அடையத் தகுதியானவர்."

- சைதன்ய சரிதாம்ருதம், மத்ய லீலா 24.330-ன் பொருளுரை

"விருப்பப்பட்ட ஆத்மாக்களை வைணவத்திற்கு மாற்றும் திறனைக் கொண்டு உத்தம அதிகாரியான வைஷ்ணவரைக் கண்டு கொள்ளலாம் என்று ஸ்ரீல பக்திவினோத தாகுரர் குறிப்புத் தருகிறார். **உத்தம அதிகாரியின் நிலையை அடைவதற்கு முன் ஒருவர் ஆன்மீக குருவாகக் கூடாது.** முதனிலை

வைஷ்ணவரோ அல்லது இடைநிலை வைஷ்ணவரோ, அதே நிலையில் உள்ளவர்களை சீடர்களாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அத்தகைய சீடர்கள் அவரது குறையுள்ள வழி நடத்துகையால் வாழ்வின் முடிவான குறிக்கோளை அடைவதில் முன்னேற முடியாது. **எனவே ஒரு சீடன் ஆன்மீக குருவாக ஓர் உத்தம அதிகாரியை ஏற்றுக் கொள்வதில் கவனமுடன் இருக்க வேண்டும்**."

- ஸ்ரீ உபதேசாமிருதம் 5 பொருளுரை (Nectar of Instruction)

## 2.2.2: *தீக்ஷா* குருவிற்கான அங்கீகாரம்

ஆன்மீக குரு என்பவர் ஒரு முதலாம் தர பக்தராக இருக்க வேண்டுமென்ற போதிலும், எல்லா முதலாம் தர பக்தரும் இயல்பாகவே ஆன்மீக குருவாகி விடுகிறார் என்று பொருள் கொள்ள முடியாது. அவர் "அங்கீகரிக்கபடுதல்" எனும் இரண்டாம் தகுதியையும் பெற்றிருக்க வேண்டும். வேத வரலாற்றில் தோன்றியுள்ள எத்தனையோ தூய பக்தர்கள், ஆன்மீக குருவாகிவிடவில்லை. ஆக, தூய பக்தன் என்ற நிலையும், ஆன்மீக குரு என்ற நிலையும் ஒன்றாகி விடாது. ஆனால் முன்பு கூறியது போலவே, ஒரு உண்மையான குரு, தூய பக்தனாக விளங்குதல் அவசியம்.

"ஒட்டு மொத்தத்தில் அவர் ஒரு முக்தி பெற்ற ஆன்மா இல்லாத காரணத்தால் கிருஷ்ண உணர்வுக்கு யாருக்கும் *தீக்ஷை* அளிக்கத் தகுதி இல்லாதவர் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். **அதற்கு உயர் அதிகாரிகளிடமிருந்து ஒருவர் ஆன்மிக ஆசிர்வாதம் பெற்றிருக்க வேண்டும்.**"

- ஜனார்தனருக்கு ஸ்ரீல பிரபுபாதா எழுதிய கடிதம், ஏப்ரல் 26,1968

-

"சீடப் பரம்பரையில் வந்து அவரது **முந்தைய ஆன்மிக குருவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆன்மிக குருவிடம்** ஒருவன் *தீக்ஷை* பெறுதல் வேண்டும். இதுவே '*தீக்ஷா விதானம்*' என்றழைக்கப்படுகிறது."

- ஸ்ரீமத் பாகவதம் 4.8.54-ன் பொருளுரை

**இந்திய நபர்:** நீங்கள் எப்போதிருந்து இந்த கிருஷ்ண உணர்வு இயக்கத்தின் ஆன்மிகத் தலைவரானீர்கள்?

......

**பிரபுபாதா: எனது குரு எனக்குக் கட்டளையிட்ட போது.** இதுவே குரு-பரம்பரை

இந்திய நபர்: உங்கள் குரு...

**பிரபுபாதா:** புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். அவசரப்படாதீர்கள். ஒரு குரு, தனது குருவால் கட்டளையிடப்படும்போது தான் குருவாகிறார். அவ்வளவு தான். அப்படியில்லை என்றால் யாரும் குருவாக முடியாது.

- பகவத்-கீதை 7.2 வகுப்பின் கேள்வி பதில் நேரத்தின் போது, அக்டோபர் 28,1975, நைரோபி, கென்யா

-

## 2.3 : குரு பரம்பரை புதிர்

ஸ்ரீல பிரபுபாதாவின் *ரித்விக் தீக்ஷை* முறை வழக்கத்திற்கு மாறானதாக தோன்றினாலும் கூட, அது முற்றிலும் சாத்திரங்களின் முடிவுகள் மற்றும் சீடப் பரம்பரையின் மரபுகளுக்கு உட்பட்டதாகவே இருப்பதை இந்த அத்தியாயத்தில் தீர ஆய்வோம்.

### 2.3.1: சீடர்களை ஏற்க *தீக்ஷா* குரு பூத உடலுடன் இருக்க வேண்டுமா?

ஸ்ரீல பிரபுபாதாவுக்குப் பிறகு சீடப்பரம்பரை இல்லாத சூழ்நிலை *ரித்விக்-தீக்ஷை* முறையை பின்பற்றுவோரால் உருவாக்கப்பட்டது எனும் கருத்து சில சமயங்களில் சிலரால் எழுப்பப்படுகிறது. ஆகவே, உடல் கொண்டு உயிர் வாழும் ஒருவரை கொண்டே சீடப்பரம்பரையை இடையறாது தொடர்ச்சி செய்யமுடியும் என்றும் அவர்கள் கருதுகின்றனர். அது மட்டுமல்லாமல், நேரடியாக பெறக்கூடிய வழிக்காட்டுதல் போல, புத்தகம் மூலமாகப் பெற இயலாது என்றும் எண்ணுகின்றனர். சீடர்களை ஏற்கவோ அல்லது திவ்ய ஞானத்தை வழங்கவோ, ஒரு குருவானவர் இவ்வுலகில் பூத உடற்கொண்டு உயிர்த்திருத்தல் அவசியமா? இக்கேள்விக்கான பதிலை சரியான கண்ணோட்டத்தில் அறிய ஸ்ரீல பிரபுபாதாவின் மேற்கோள்கள் மற்றும் சாத்திரச் சான்றாதாரங்களை இனி நாடுவோம்.

**மதுத்விஸா:** ஆன்மிக குருவின்றி, ஏசு கிறிஸ்துவின் வார்த்தைகளை மட்டுமே ஏற்று, அவரது போதனைகளை பின்பற்றும் கிருஸ்துவர்கள் ஆன்மிக உலகை அடைய முடியுமா?
**ஸ்ரீல பிரபுபாதா:** உங்கள் கேள்வி எனக்குப் புரியவில்லை.
**தமால கிருஷ்ணா:** இக்காலத்து கிருஸ்துவர்கள், ஒரு ஆன்மிக குருவின் உதவியின்றி, பைபிளைப் படிப்பதன் மூலம் ஏசு கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றி ஆன்மிக உலகை...
**ஸ்ரீல பிரபுபாதா:** நீங்கள் பைபிளைப் படிக்கிறீர்கள் என்றால் ஒரு ஆன்மிக குருவைப் பின்பற்றுகிறீர்கள் என்று பொருள். குரு இல்லை என்று நீங்கள் எப்படிக் கூற முடியும்? நீங்கள் பைபிளைப் படிக்கும் போதே, பகவான் ஏசு கிறிஸ்துவின் உபதேசங்களை, அதாவது ஒரு ஆன்மிக குருவைப் பின்பற்றுகிறீர்கள். ஆகவே, குரு இல்லை என்று எப்படி நீங்கள் கூற முடியும்?
**மதுத்விஸா:** நான் உயிருடன் வாழும் குருவைக் குறித்து கூறினேன்.
**ஸ்ரீல பிரபுபாதா:** **ஆன்மிக குரு என்பவர் நித்தியமானவர்**. ஆகவே அவருக்கு அழிவே இல்லை. உங்கள் கேள்வி குரு இல்லாத சூழலைப் பற்றியது. குரு இல்லாத ஒரு சூழல் என்பது ஒருவர் வாழ்வில் எப்போதுமே கிடையாது. இந்த குருவோ அல்லது அந்த குருவோ அது வேறு விஷயம். ஆனால் குருவை நாம் ஏற்றே ஆக வேண்டும். **பைபிளை ஒருவர் படிக்கும் போது, ஏசு கிறிஸ்துவின்**

**வழி வந்த ஒரு ஆன்மிக குருவை பிரநிதிக்கும் ஒரு பூசாரியையோ, குருமாரையோ நீங்கள் பின்பற்றுவதாகப் பொருள்.**

- ஸ்ரீல பிரபுபாதர் காலை நடைப்பயணக் கலந்துரையாடல், அக்டோபர் 2, சீயட்டல்

**பக்தர்:** ஸ்ரீல பிரபுபாதா அவர்களே, நீங்கள் எங்களுடன் இல்லாத பொழுது நாங்கள் எவ்வாறு உபதேசம் பெறுவது? உதாரணமாக எங்களுக்கு ஒரு சந்தேகம் எழுந்தால் என்ன செய்வது?

**ஸ்ரீல பிரபுபாதா:** உங்கள் கேள்விகளுக்கான விடை எனது புத்தகத்தில் உள்ளது.

- ஸ்ரீல பிரபுபாதாவின் காலை நடைப்பயணக் கலந்துரையாடல், மே 13,1975, லாஸ் ஏஞ்செல்ஸ், அமெரிக்கா

-

“எவனொருவன் ஒரு வைஷ்ணவர் இறந்துவிட்டதாகக் கூறுகிறானோ, அவனுடைய புத்தி பேதளித்துவிட்டதென்று நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் ஒரு வைஷ்ணவர் எக்காலத்திலும் இறப்பதில்லை; மாறாக தனது உபதேசங்களின் மூலமாக நித்தியமாக வாழ்கிறார்.”

- ஸ்ரீல பக்திவினோத தாகூரர்

“கிருஷ்ணரும் அவரது பிரதிநிதியும் ஒன்றே. கிருஷ்ணர் எவ்வாறு ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான இடத்தில் இருக்கிறாரோ அவ்வாறே ஒரு குருவும் தனது சீடன் விரும்பும் இடத்தில் இருக்க முடியும். குரு என்பவர் உடல் அல்ல; அவர் ஒரு தத்துவம். ஒரு நிகழ்ச்சி எவ்வாறு ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான இடங்களில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் பார்க்கப்படுகிறதோ அவ்வாறே குருவும் ஒரே நேரத்தில் பல இடங்களிலும் இருக்க முடியும்.”

- மாலதிக்கு ஸ்ரீல பிரபுபாதர் எழுதிய கடிதம், மே 28, 1968

இதே கருத்தை சுட்டிக்காட்டும் ஸ்ரீல பிரபுபாதாவின் மேற்கோள்கள் பல உண்டெனினும், அக்கருத்து இங்கு மிகத் தெளிவாக உள்ளது. ஆன்மீக குருவின் நூல்கள், திவ்ய ஞானத்தை வழங்கிக் கொண்டிருக்கும் போது, ஆன்மீக குரு அவ்வேலையை சரீரம் தாங்கி செய்யவேண்டியதற்கான அவசியமில்லை.

ஸ்ரீல பிரபுபாதா உடற்கொண்டு வாழ்ந்த காலத்திலும் கூட, அவருடைய எத்தனையோ சீடர்களுக்கு நேரடியாக *தீக்ஷை* வழங்கப்பட்டதில்லை; அதுபோலவே பல சீடர்கள் அவருடைய நேரடி சங்கத்தைப் பெற்றதுமில்லை. ஆலய நிர்வாகம் மற்றும் ஆட்சி குழு ஆணையத்தில் உள்ள பக்தர்கள், ஸ்ரீல பிரபுபாதாவின் பிரதிநிதியாக இருந்து, மற்ற பக்தர்களை அவரது கற்பித்தல்களுக்கேற்ப வழிநடத்தும் *சிக்ஷா* குருவாக விளங்கி, அனைவரும் அவருடைய (ஸ்ரீல பிரபுபாதாவின்) சீடர்களாகின்ற வகையில் நிர்வாக அமைப்பை அவர் உருவாக்கி வைத்திருந்தார். அதோடு, தற்சமயம் வாதத்தை

எதிர்கொண்டிருக்கும் *ரித்விக் தீக்ஷை* முறைப்படியே, அப்பொழுதெல்லாம் *தீக்ஷை* வழங்கப்பட்டு வந்தது.

*ஏவம் பரம்பரா-ப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ விது:*
*ஸ காலேனேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப*

*ஏவம் – இவ்வாறாக; பரம்பரா – சீடத்தொடரில்; ப்ராப்தம் – பெறப்பட்டு வந்த; இமம் – இவ்விஞ்ஞானம்; ராஜ-ருஷய: – புனித மன்னர்கள்; விது: – அறியப்பட்டது; ஸ: – அவ்வறிவு; காலேன – காலப்போக்கில்; இஹ – இவ்வுலகில்; மஹதா – மிகச்; சிறந்த;* ***யோக: – பரத்துடனான ஒருவனது உறவு பற்றிய விஞ்ஞானம்; நஷ்ட: – சிதைந்து விட்டது;*** *பரந்தப – எதிரிகளை ஒடுக்கும் அர்ஜுனா.*

"உன்னதமான இவ்விஞ்ஞானம் சீடர்களின் சங்கிலித் தொடர் மூலமாகப் பெறப்பட்டு, அவ்வாறே புனிதமான மன்னர்களால் உணரப்பட்டது. ஆனால், காலப்போக்கில் அத்தொடர் விட்டுப்போகவே, இவ்விஞ்ஞானம் மறைந்து விட்டதைப் போலத் தோன்றுகின்றது."

- பகவத் கீதை 4.2

இறைவனுடனான தமக்கிருக்கும் உறவு பற்றியான விஞ்ஞானம் அழியும் போது, *பரம்பரா* எனும் சீடப்பரம்பரை அழிந்து போகிறது என்று இச்சுலோகம் தெளிவாக உணர்த்துகின்றது. குறிப்பாக இங்கு *யோக நஷ்ட:* என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, விஞ்ஞானம் அழிந்தது என்று பொருள். மாறாக *சரீர நஷ்ட:*, அதாவது குருவின் உடல் மறைந்துபோனது என்று குறிப்பிடப்படவில்லை. ஆகவே, பக்தி யோகத்தின் விஞ்ஞானம் அழிந்து போகும் போதே, சீடப்பரம்பரை உடைந்ததென்று பொருள்; மாறாக ஆன்மீக குருவின் உடல் அழியும் போதல்ல.

இஸ்கான்-ஐப் பொறுத்தவரையில் ஸ்ரீல பிரபுபாதாவின் புத்தகங்கள் பரந்து விரிந்துள்ளதோடு ஆயிரக்கணக்கான பக்தர்கள் இன்றும் அந்நூல்களை படித்து பக்தர்களாகின்றனர். அப்படியிருக்கையில், பக்தித்தொண்டின் விஞ்ஞானம் தொலைந்து போகவில்லை. ஆகவே, சீடப்பரம்பரையும் அழியவில்லை.

"இவை சாதாரண புத்தகங்கள் அல்ல. இவை பதிவு செய்யப்பட்ட கீர்த்தனைகள். இதைப் படிப்பவர் கேட்கவும் செய்கின்றார்."

- ரூபாங்க தாசருக்கு ஸ்ரீல பிரபுபாதர் எழுதிய கடிதம், அக்டோபர் 19,1974

"உன்னத ஓசையை எழுப்பியவர் காணப்படவில்லை என்றாலும், அதன் சக்தி ஒருபொழுதும் குறைந்துவிடாது."

- ஸ்ரீமத் பாகவதம் 2.9.8, பொருளுரை

"கிருஷ்ணர் அல்லது ஆன்மிக குருவிடமிருந்து பிரிவை நாம் உணரும் போது, நாம் அவரது உபதேசங்களை நினைவு கூர்ந்தால் அவரைப் பிரிந்திரிப்பதாகத் தோன்றும் எண்ணம் மறைந்துவிடும். குரு அல்லது கிருஷ்ணருடனான அத்தகைய

சங்கம் உடலளவிளானதள்ள; ஒலி அதிர்விலானது. அதுவே உண்மையான சங்கம். நாம் கிருஷ்ணரைப் பார்ப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் குடுக்கிறோம். ஆனால் கிருஷ்ணர் இப்பூவுலகில் வாழ்ந்த போது பலர் அவரைக் கடவுளாக அறிந்திருக்கவில்லை. ஆகவே பார்ப்பதன் பலன் என்ன? கிருஷ்ணரைப் பார்ப்பதனால் அவரைப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் அவருடைய உபதேசங்களை கவனமாகக் கேட்பதன் மூலம் அவரை அறிந்து கொள்ளும் தளத்திற்கு நாம் வர முடியும். கிருஷ்ணரை ஒலி அதிர்வுகள் மூலம் நாம் உடனே தொட முடியும்; ஆகவே நாம் கிருஷ்ணர் மற்றும் ஆன்மிக குருவின் ஒலி அதிர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவ்வகையில் தான் நாம் அவர்களுடனான பிரிவை உணராத வண்ணம் ஆனந்தமாக இருக்க முடியும்."

- கிருஷ்ண உணர்வுக்கான வழி எனும் புத்தகத்திலிருந்து

இம்மேற்கோள்கள் அனைத்துமே ஸ்ரீல பிரபுபாதாவின் புத்தகங்களை படிப்பதன் மூலமாக திவ்ய ஞானத்தைப்பெற்று, அவரிடமிருந்து நேரடியாகவே நாம் *தீக்ஷைப்* பெற இயலுமென்ற உண்மையை எடுத்துரைக்கின்றது.

ஸ்ரீல பிரபுபாதர் நம்மோடு பூத உடலில் இல்லாத காரணத்தால் அவர் நமது சேவையில் மகிழ்ந்தாரா என்பதை எவ்வாறு உறுதி செய்து கொள்வது? ஆன்மீக குரு திருப்தியடைந்தால், ஆண்டவனும் திருப்தியடைகிறார் என்பதே இக்கேள்விக்கான விடை. *யஸ்ய ப்ரசாதாத் பகவத் ப்ரசாதஹ.* இவ்வாறாக திருப்தியடைந்த கிருஷ்ணர் அச்சீடனுக்கு நல்லதொரு ஆன்மீக முன்னேற்றத்தை நல்குவார்.

*பக்தி: பரேசானுபவோ விரக்திர்*
*அன்யத்ர சைஷ த்ரிக ஏக-கால:*
*பிரபத்யமானஸ்ய யதஸ்னத: ஸ்யுஸ்*
*துஷ்டி: புஷ்டி: க்ஷுத்-அபாயோ 'நுகாஸம்*

"சாப்பிடுபவனுக்கு ஒவ்வொரு கவளத்திலும் திருப்தியும், புஷ்டியும், பசி நீங்குதலும் ஒரே சமயத்தில் ஏற்படுவது போலவே, பரம புருஷரைத் தஞ்சமடைந்தவனுக்கு பக்தி, பாரமபுருஷரைப் பற்றிய நேரடியான அனுபவம் மற்றும் பௌதிகத் துறவு ஆகிய இம்மூன்றும் ஒரே சமயத்தில் உண்டாகும்."

- ஸ்ரீமத் பாகவதம் 11.2.42

இம்மூன்று மட்டுமே உண்மையான ஆன்மீக வளர்ச்சியின் அளவுகோள் ஆகும். ஒருவன் படிப்படியாக போலியற்ற சுய லாபமற்ற பக்தியையும், முழுமுதற்கடவுளின் நேரடி உணர்தல்களையும் மற்றும் முக்கியமாக பாவகரமான பௌதிக வாழ்வின் பந்தத்திலிருந்து விடுபடும் ஆவலையும் உணர்வானாயின், அவன் ஸ்ரீல பிரபுபாதாவை ஆனந்தமடையச் செய்துள்ளான் என்பது நிரூபணமாகும்.

## 2.3.2: முந்தைய ஆச்சாரியர்களிடமிருந்துநாம் உபதேசம்(*சிக்ஷா*) பெற முடியுமா?

ஒரு ஆச்சாரியரின் புத்தகங்களைப் படிப்பதன் மூலம் நாம் அவருடன் சங்கம் கொள்ள முடியுமென்றால் நாம் ஏன் இந்த முறையைப் பயன்படுத்தி ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூரரிடமிருந்தோ, ஸ்ரீல ரூப கோஸ்வாமியிடமிருந்தோ அல்லது குரு பரம்பரையிலுள்ள ஏதேனும் ஒரு ஆச்சரியரமிருந்தோ உபதேசம் பெறமுடியாதெனும் ஒரு கேள்வி இங்கே எழலாம். அதற்கான விடை கீழ்கண்டவாறு ஸ்ரீல பிரபுபாதரால் கூறப்படுகிறது.

"ஸ்ரீமத் பாகவதத்தின் உண்மையான செய்தியைப் பெறுவதற்கு, **சீடப் பரம்பரையின் சங்கிலித் தொடர் மூலமாக வரும் தற்போதைய ஆன்மிக குருவை** ஒருவர் அணுகவேண்டும். அத்தகைய ஆன்மிக குருவால் முறையாக *தீக்ஷை*யளிக்கப்பட்ட பின், பக்தித்தொண்டை நிறைவேற்றுவதன் மூலமாக தவம் இயற்றுவதில் ஒருவன் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்."

- ஸ்ரீமத் பாகவதம் 2.9.7 பொருளுரை

சீடப் பரம்பரையின் தற்போதைய இணைப்பு என்பது சீடப் பரம்பரையில் வந்த ஆன்மிக முடிவுகளை பொதுமக்களின் மத்தியில் வெகுவாரியாகப் பரப்புபவரைக் குறிக்கும். அப்பணி தற்காலத்தில் ஸ்ரீல பிரபுபாதராலேயே, அவரது புத்தகங்கள் மூலமாக செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, அவரே இஸ்கானின் அங்கீகாரம் பெற்ற *தீக்ஷை* அளிக்கும் குருவாவார்.

## 2.3.3: ஸ்ரீல பிரபுபாதா குரு சீடப் பரம்பரை வழக்கத்தை உடைக்கின்றாரா?

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் கௌடிய வைஷ்ணவ சித்தாந்தத்தின் கோட்பாட்டை இக்காலத்தில் போதிக்கவந்தவரென்றும், நமது சம்பிரதாயத்தின் முந்தைய ஆச்சாரியர்கள் எவரும் *ரித்விக் தீக்ஷை* முறையினை நிறுவியதில்லை என்பதாலும், ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் எப்படி மரபு மீறிய ஒருச்செயலை செய்வார் என்ற கேள்வி சிலரால் சில சமயங்களில் எழுப்பப்படுகிறது. ஸ்ரீல பிரபுபாதா, மரபு மீறிய செயலைச் செய்யமாட்டாரென்பதால், அவரது மறைவுக்குப் பிறகு பின்பற்றப்படும் *ரித்விக் தீக்ஷை* முறை அவரால் அங்கீகரிக்கப்படாத ஒன்று என்று அவர்கள் கூறுகிறார்கள்.

பந்தப்பட்ட ஆன்மாக்களுக்கு தூயக் கிருஷ்ண உணர்வினைக் குறித்து பிரச்சாரம் செய்வதே சீடப் பரம்பரையின் முக்கியமான மரபு என்பதை நாம் இவ்விடத்தில் புரிந்து கொள்ளவேண்டும். அந்தந்த கால, நேர மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப ஒரு ஆன்மிக குரு பின்பற்றும் திவ்யமான யுக்தியானது மற்ற குருவிடமிருந்து வேறுபட்டாலும், கிருஷ்ண பக்தியினைப் பரப்புதல் எனும் தத்துவத்தில் பேதம் இருக்காது.

உண்மையில் ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் கால, நேர மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப பல மாற்றங்களைச் செய்தார். அதில் மிக முக்கிய மாற்றம் என்னவெனில் ஒருநாளைக்கு குறைந்தபட்சம் பதினாறு முறை ஜபம் செய்வதென்பதாகும். ஆனால் அதற்கு முந்திய முறை குறைந்தபட்சம் அறுபத்து நான்கு முறை ஜபம் செய்வதாகும். உண்மையில் ஸ்ரீல பிரபுபாதரின் ஆன்மிக குரு, ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி அவர்கள், யாரொருவர் ஒரு நாளைக்கு அறுபத்து நான்கு முறை ஜபம் செய்யமில்லையோ அவர் ஒரு மனிதரே அல்ல என்று சொல்லி வந்தார். ஆனால் ஸ்ரீல பிரபுபாதர் அவர்கள் இந்த நவீனகால மக்கள் ஒருநாளைக்கு அருபத்து நான்கு முறை ஜபம் செய்யத் தகுதி இல்லாதவர்கள் என்பதால் ஒருநாளைக்கு குறைந்தபட்சம் பதினாறு முறைகள் ஜபம் செய்தால் போதுமானது என்று கூறினார்.

"பகவானே, பிரகாசிக்கும் சூரியனை ஒத்த நீங்கள் உங்களுடைய பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கின்றீர்கள். எனவே நீங்கள் ஒரு கற்பக மரம் (வாஞ்சா-கல்ப தரு) என்று அழைக்கப்படுகிறீர்கள். ஆச்சாரியர்கள் பயங்கரமான அறியாமைக் கடலைக் கடப்பதற்கு உங்களுடைய தாமரைப் பாதங்களில் முழுமையாகத் தஞ்சமடைந்து, **பிறவிக் கடலைக் கடக்கும்பொழுது, எந்த முறையினால் அவர்கள் கடந்தனரோ, அம்முறையினை இம்மண்ணுலகிலேயே விட்டுச் செல்கின்றனர். உங்களுடைய பிற பக்தர்களிடம் நீங்கள் மிகவும் கருணை கொண்டிருப்பதால், அவர்களுக்கு உதவும் பொருட்டு இம்முறையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள்**."

- ஸ்ரீமத் பாகவதம் 10.2.31

"நம் கிருஷ்ண பக்தி இயக்கத்திலும்... இவ்வாறாக தவறான உடலுறவு, போதைப் பழக்கம், மாமிசம் உண்ணுதல் மற்றும் சூதாட்டம் ஆகிய நான்கு பாவச்செயல்களைத் தவிர்த்து, **தினமும் பதினாறு முறை ஜபம் செய்யும்படி பக்தர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். இவை அங்கீகரிக்கப்பட்ட உபதேசங்களாகும்**... கப்பல் போன்ற பகவானின் தாமரைப் பாதங்களை ஏற்றுக்கொண்டு அறியாமைக் கடலைக் கடப்பதற்குரிய பொருத்தமான வழிமுறையை ஆச்சாரியர் அளிக்கிறார். இந்த வழிமுறை உறுதியாகப் பின்பற்றப்படுமானால், இதனைப் பின்பற்றுபவர்கள் பகவானின் கருணையால் முடிவான இலக்கை அடைதல் நிச்சயம். இந்த முறை *ஆச்சார்யா-ஸம்ப்ரதாயம்* என்றழைக்கப்படுகிறது. எனவே தான் *ஸம்ப்ரதாய-விஹீனா யே மந்த்ராஸ் தே நிஷ் பலாமதா:* என்று பத்ம புராணம் கூறுகிறது. *ஆச்சார்யா-ஸம்ப்ரதாயம்* அதிகாரப்பூர்வமானதாகும். எனவே, இதனை ஒருவன் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இல்லையெனில் ஒருவனது முயற்சி பலனற்றதாகிவிடும்."

- ஸ்ரீமத் பாகவதம் 10.2.31 பொருளுரை

ஒருநாளைக்கு பதினாறு முறை மட்டும் ஜெபம் செய்வதென்பது வழக்கத்தில் இல்லாத ஒரு செயல் என்ற போதிலும், ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் மேற்கண்ட பொருளுரையில் இதனை அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்கிறார். இதனை ஒரு ஆச்சாரியாரின் கால, இட மாறும் சூழ்நிலைக்கேற்ற மாற்றங்களுடன் பிரச்சாரம் செய்வதற்கான திவ்யமான அதிகாரம் எனலாம். இங்கே கிருஷ்ண உணர்வு இயக்கத்தின் தத்துவம் மாற்றப்படவில்லை; மாறாக ஆச்சாரியரால் (ஆச்சரிய பரம்பரை) அந்த சூழலுக்கேற்ற சிறிய மாற்றங்கள் செய்யப்படுகிறது. ஆகவே, இந்த மரபிற்கு மாறான பதினாறு முறை ஜபம் செய்வதென்பது அங்கீகாரம் பெற்றதெனில், ஏன் மரபில் இல்லாத *ரித்விக்* முறையிலான *தீக்ஷை* முறை அங்கீகாரம் பெற்றதாக இருக்க முடியாது?

மரபு மீறிய செயல் எனக்கூறி ஒருவர் *ரித்விக் தீக்ஷை* முறையை நிராகத்தால், ஒரு நாளைக்கு பதினாறு முறை ஜெபம் செய்யும் முறையையும் அவர் நிராகரிக்க வேண்டும். முந்தைய ஆச்சாரியர்கள் கூறிய வண்ணம் அவர் ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் அறுபத்துநான்கு முறைகள் ஜெபம் செய்யவேண்டும். ஆனால் அது இன்றைய சூழலில் சாத்தியமல்ல. ஒரு நாளைக்கு பதினாறு முறைகள் ஜெபம் செய்வது மட்டுமே நடைமுறைக்கு எப்படி சாத்தியமானதோ, அதுபோலவே *ரித்விக் தீக்ஷை* முறை மட்டுமே இக்கால கட்டத்தில் சாத்தியமானது.

## 2.3.4: ஆனால் ஸ்ரீல பிரபுபாதா முன்பு இவ்வாறு கூறியுள்ளாரே!?

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் வாழ்ந்த காலத்தில், தன் சிஷ்யர்களை தனது உடல் மறைவுக்குப் பிறகு ஆன்மிக குருவாகி, தத்தமது சீடர்களுக்கு சுயமாகத் *தீக்ஷை*யளித்து, குரு-சீடப் பரம்பரையைத் தொடரும்படி பலமுறை உற்சாகப்படுத்தியதுபோலத் தெரிகிறது. அப்படியிருக்கையில் அவர் ஏன் பிற்காலத்தில் இந்த *ரித்விக் தீக்ஷை* முறையினை ஏற்படுத்தி சீடப் பரம்பரையின் கடைசி ஆச்சாரியராகி, குரு-சீடப் பரம்பரையை நிறுத்தினார்?

இவ்விடத்தில் நாம் பகவத் கீதை 4.2 -ல் கூறப்பட்டபடி, சீடப் பரம்பரைத் தொடர்ச்சி என்பது கோட்பாட்டின் தொடர்ச்சி என புரிந்துகொள்ளலாம். அதனை பரம புருஷ பகவானை பக்தி செய்யும் அறிவு சார் பயிற்சி எனவும் கொள்ளலாம். ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்கள் எதுவரை அவரது கூற்றுக்களை மக்களிடம் சென்று சேர்த்துக்கொண்டுள்ளதோ அதுவரை சீடப்பரம்பரை வீழ்சியுருவதில்லை என்பதை நாம் அறியலாம்.

இருப்பினும், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு அனைவரையும் குருவாகும்படி சைதன்ய சரிதாம்ரிதத்தின் கீழ்கண்ட ஸ்லோகம் மூலம் கூறுவதாக ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் அடிக்கடி கூறுகிறார்:

*யாரே தேக்கா, தாரே கஹா கிருஷ்ணா-உபதேச*
*ஆமார ஆஜ்னாய குரு ஹனா தர ஏ தேச*

"ஸ்ரீமத் பாகவதம் மற்றும் பகவத் கீதையில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணரின் ஆணைகளை அனைவரும் படித்து, உணர்ந்து பின்பற்றச்செய்யுங்கள். இதன்மூலம் நீங்கள் ஆன்மீக குருவாகி இவ்வுலகின் அனைத்து உயிர்களையும் முக்தியின் வழியில் அழைத்துச்செல்லுங்கள்."

- சைதன்ய சரிதாம்ரிதம், மத்ய லீலா, 7.128

எனினும், இந்த ஸ்லோகத்தில் குரு எனும் பதத்திற்கு பிரபுபாதர் அளிக்கும் அர்த்தத்தை இந்த ஸ்லோகத்தின் பொருளுரையில் காணலாம்:

"அதாவது, ஒருவன் தனது வீட்டில் அமர்ந்தபடி, ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, ஸ்ரீமத் பாகவதம் மற்றும் பகவத் கீதையில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணரின் ஆணைகளை அனைவருக்கும் அறியச்செய்ய வேண்டும்."

- சைதன்ய சரிதாம்ருதம், மத்ய லீலை, 7.128, பொருளுரை

மேலும்

"ஒருவன் க்ருஹஸ்தனாகவோ, மருத்துவனாகவோ, பொறியாளராகவோ அல்லது வேறு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதனால் பெரிய வேறுபாடு onrum ஏற்படப்போவதில்லை. ஒருவரின் கடமை ஸ்ரீ சைதன்ய மகாப்ரபுவின் ஆணைகளை சிரமேற்கோண்டு ஹரே கிருஷ்ண மகா மந்திரத்தை ஜபித்துக்கொண்டே தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு ஸ்ரீமத் பாகவதம் மற்றும் பகவத் கீதையில் உள்ள கருத்துக்களை தெரிவிக்க வேண்டும்.... **சீடர்களை ஏற்காமல் இருப்பதே சிறந்ததாகும்**."

- சைதன்ய சரிதாம்ரிதா, மத்ய லீலா, 7.130, பொருளுரை

மேற்கண்ட பொருளுரையில் கூறப்பட்டுள்ளபடி, கற்பிக்க அறிவுறுத்தப்படும் அக்குரு, கற்பிப்பதற்கு முன் அதற்கானத் தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டுமென அறிவுறுத்தப்படவில்லை. எந்நிலையிலிருந்தாலும் பரவாயில்லை என்பதன் மூலம் உடனடியாக கற்பிக்கத்துவங்குங்கள் என்ற கருத்து வலியுருந்ததப்படுகிறது. இதன் மூலம் அனைவரும் அவர்கள் அறிந்ததை பிரச்சாரம் செய்து, அதன்மூலம் உபதேசிக்கும் *சிக்ஷா* குருவாக செயல்படவேண்டும் என்று அறிவுருத்தப்பட்டிருப்பது தெளிவாகிறது. அதுமட்டுமின்றி, இங்கே அந்த *சிக்ஷா* குரு தனது நிலைமை மாற்றி பின்னர் *தீக்ஷா* குருவாக செயல்படும்படி அறிவுறுத்தப்படவில்லை என்பது கீழ்கண்ட வாக்கியத்தின் மூலம் மறு உறுதி செய்யப்படுகிறது

**"சீடர்களை ஏற்காமல் இருப்பதே சிறந்ததாகும்."**

- சைதன்ய சரிதாம்ரிதா, மத்ய லீலா, 7.130, பொருளுரை

சீடர்களை ஏற்பதென்பது *தீக்ஷா* குருவின் வேலையாகும். *சிக்ஷா* குரு என்பவர் *தீக்ஷா* குருவின் பணிக்கு உதவுவதில் ஈடுபட்டு மாசற்ற வகையில் கிருஷ்ண உணர்வைத் தன்னால் முடிந்த அளவுக்குப் பிரச்சாரம் செய்யவேண்டும். ஸ்ரீல பிரபுபாதரின் மேற்கண்ட பொருளுரையிலிருந்து நாம் அறிவது, சைதன்ய மகாபிரபு அனைவரும் *தீக்ஷா* குருவாக அங்கீகரிக்கவில்லை; மாறாக *சிக்ஷா* குருவாக ஆவதற்கே அங்கீகரித்தார் என்பதாகும்.

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் தனது சீடர்களை *தீக்ஷா* குருவாக ஆகவேண்டுமென்று முன்னர் பலமுறை உற்சாகப்படுத்தியது உண்மையென்ற போதிலும், ஜூலை 9, 1977-ல் அவர் அளித்த இறுதி உத்தரவு, அந்தப் பல கூற்றுகளையும் காலாவதியாக்கிவிட்டது. பின்வரும் இந்தக் கலந்துரையாடல் இதனை உறுதிப்படுத்துகிறது.

**அச்சுதானந்தா**: (பார்வையாளர்கள் எழுப்பிய கேள்வியைப் படிக்கிறார்) ஸ்ரீ பகவத் கீதையின் இறுதியில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் "ஸர்வ தர்மான் பரித்யஜ்ய" (பகவத் கீதை 18:66) என்று கூறுகிறார். ஆனால், கீதையில் வேறு இரண்டு இடங்களில், ஸ்ரேயான் ஸ்வ-தர்மோ, பர-தர்மோ பயாவஹா: (பகவத் கீதை 3:35) அதாவது ஒருவர் மற்றவரது கடமையைச் செய்வதை விட, தனது சுயக்கடமையைச் செய்யவேண்டுமென்கிறார்.

**பிரபுபாதா**: ஆம்.

**அச்சுதானந்தா**: இதை நாம் எப்படி..

**பிரபுபாதா**: நான் உங்களிடம் பல விஷயங்களைக் கூறலாம். ஆனால் நான் உங்களிடம் ஒரு விஷயத்தை நேரடியாக "அதைச் செய்" எனக் கூறும்போது அதனைச் செய்வதே உங்களுடைய முதல் கடமையாகும். "ஐயா, நீங்கள் முன்னர் இவ்வாறு கூறினீரே! இப்போது இவ்வாறு கூறுகிறீர்களே!!" என நீங்கள் வாதம் செய்ய முடியாது. அது உங்கள் கடமையல்ல. நான் இப்போது கூறுவதை நீங்கள் செய்யுங்கள். அதுவே பணிவின் இலக்கணம். கிருஷ்ணர் முன்னுக்குப்பின் முரணாக எதையும் சொல்லவில்லை. ஆனால் ஒருவர், அவர் அவ்வாறு பேசியதாகக் கருதினால் அது தவறு, அது அவ்வாறில்லை. உங்களால் அவர் கூறியதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. "உங்களால் நான் முன்னர் கூறியதைப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் பரவாயில்லை; இப்போது எனது நேரடிக்கட்டளையை எடுத்துக்கொள்ளுங்கள், *ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம்*, (பகவத் கீதை 18:66). அதுவே உங்கள் கடமை. ஒரு எஜமானர் என்ன கூறுகிறாரோ, அதனை எவ்வித விவாதமுமில்லாமல் ஏற்பதே ஒரு சீடனின் கடமையாகும்.

- ஸ்ரீல பிரபுபாதரின் பாகவதம் 5.5.3 உரை, ஏப்ரல் 15, 1975, ஹைதராபாத்

பகவத் கீதையில், பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனிடம் *த்யான யோகம்* முதல் *ஞான யோகம்* வரை பலவகையான யோகங்களைக் குறித்து பேசிய போதிலும் , அவரது கடைசி உபதேசம் மற்றவற்றை எல்லாம் விஞ்சிவிட்டது.

*ஸர்வ-தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் ஷரணம் வ்ரஜ*
*அஹம் த்வாம் ஸர்வ-பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஷுச:*

- பகவத் கீதை 18.66

“எல்லாவிதமான தர்மங்களையும் துறந்து, என்னிடம் மட்டுமே சரணடைவாயாக. உன்னை எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் நான் விடுவிக்கின்றேன், பயப்படாதே.”

“நீங்கள் எல்லாவற்றையும் துறந்து எனது பக்தராகுங்கள்”, என்பதையே கிருஷ்ணரின் இறுதி உபதேசமாக எடுத்துக்கொண்டு, அதனைப் பின்பற்றவேண்டும்.

- பகவான் சைதன்யரின் உபதேசங்கள், அத்தியாயம் 11

ஸ்ரீபாத சங்கராச்சரியர் தனது “பஜ கோவிந்தம்” எனும் பாடலில் அளிக்கும் கடைசி உபதேசம் கூட அவரது முந்தைய மாயாவாத, அருவ உபதேசங்களை முறியடிப்பதற்காகவே கூறப்பட்டது. ஸ்ரீபாத சங்கராச்சரியர், இந்தப் பாட்டின் துவக்கத்திலேயே தான் முன்னர் விரிவாக அளித்த வேதங்களின் மாயவத, அருவக் கருத்துக்கள் ஒருவருக்கு இறுதிக்காலத்தில் உதவாது என்றுத் தெள்ளத்தெளிவாகக் கூறுகிறார். ஒருவர் உண்மையிலேயே ஆன்மிகப் பலன் அடைய விரும்பினால், தம்முடைய பழைய உபதேசங்களையெல்லாம் மறந்துவிட்டு, பக்தித் தொண்டின் மூலம் கோவிந்தனை வணங்கவேண்டுமென்று அவர் கூறுகிறார்.

இங்கே நாம் கூறும் கருத்து என்னவெனில், தனது ஆச்சாரியாரின் முந்தைய உபதேசங்கள் முரணாகத் தோன்றினாலும் கூட, அது குறித்து வாதம் செய்யாமல், அவரது கடைசி உபதேசத்தை உடனடியாகச் செய்வதே ஒரு சீடனுடைய கடமையாகும். இறுதி உபதேசம் எல்லா முந்தைய உபதேசங்களையும் மிஞ்சிவிடுகிறது. ஆகவே, ஸ்ரீல பிரபுபாதர் தமது ஜூலை 9,1977 உத்தரவு மற்றும் இறுதி உயிலில் கூறப்பட்டபடி அவரது இறுதி உபதேசம் எந்த விதமான வாதமுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இங்கேயும் நாம் அறிந்துகொள்வதென்னவெனில், ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்கள் உள்ளமட்டிலும் அவரே இஸ்கானுடைய அங்கீகரிக்கப்பட்ட *தீக்ஷா* குருவாவார்.

## 2.4: ஸ்ரீல பிரபுபாதர் இஸ்கானுக்கு *சிக்ஷா* குருவா அல்லது *தீக்ஷா* குருவா??

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் தனது புத்தங்கள் மூலமாக உபதேசமளிப்பதால் அவர் *சிக்ஷா* குருவென்றும், ஆன்மிகப் பெயரளிப்பவரே *தீக்ஷா* குரு என்றும் இன்னொரு கருத்து இங்கே நிலவுகிறது.

ஆனால், *தீக்ஷை*யின் விளக்கம் குறித்த முந்தைய பிரிவில், *தீக்ஷா* என்பது ஆன்மிக குரு திவ்ய ஞானத்தை அளிக்கும் செயல் என்று நாம் அறிந்து கொண்டோம். ஜூலை 7, 1977 உத்தரவுக்கடிதத்தில் ஸ்ரீல பிரபுபாதா கூறியபடி, ஜப மாலையில் ஜபம் செய்து கொடுப்பதும், ஆன்மிகப் பெயர் அளிப்பதும் ஒரு சடங்கே ஆதலால், அதனை ஸ்ரீல பிரபுபாதரின் பிரதிநிதியாக மற்றவர்கள் செய்யமுடியும்.

ஸ்ரீல பிரபுபாதருடைய கீழ்கண்ட கூற்று இதனைத் தெளிவாக்குகிறது.

"ஆட்சி குழு ஆணையம் உபதேசிக்கும் குருவாகச் செயல்படவேண்டும். நானே *தீக்ஷை*யளிக்கும் குரு; நீங்கள் நான் உபதேசித்ததையே உபதேசித்தும், செய்ததையே செய்தும், உபதேசிக்கும் குருவாகச் செயல்படவேண்டும்."

- ஸ்ரீல பிரபுபாதா மதுத்விஸாவிற்கு எழுதிய கடிதம், ஆகஸ்ட், 4, 1975, டெட்ராய்ட், அமெரிக்கா

"சில சமயங்களில் *தீக்ஷா* குரு இல்லாமல் இருக்கலாம். அப்போது ஒருவர் ஒரு முன்னேறிய பக்தரிடம் உபதேசம் பெறலாம். அவர் *சிக்ஷா* குருவாக அறியப்படுவார்."

- ஸ்ரீல பிரபுபாதாவின் பகவத் கீதை 17.1-3 வகுப்பு, ஜூலை 4, 1974(தவறான தேதி; சரியான தேதிக்கான ஆய்வு நிலுவையில் உள்ளது),ஹோனாலுலு, ஹவாய்

*தீக்ஷா* குரு என்பவர் திவ்ய ஞானத்தை அளிப்பவர், *சிக்ஷா* குரு என்பவர் *தீக்ஷா* குருவின் உபதேசத்திற்கேற்ப மற்றவர்களை வழிநடத்துபவர்.

ஸ்ரீல பிரபுபாதரே *தீக்ஷா* குரு; அவரது பொறுப்பான பக்தர்கள் உபதேசிக்கும் குரு அல்லது *சிக்ஷா* குரு ஆவர்.

# அத்தியாயம் 3 :
# திசைமாற்றம் - சாத்திர ஆய்வு

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள், அவரது உடலை விட்டுப் பிரிந்த பின்பும் இஸ்கான் இயக்கத்திற்கு தொடர்ந்து தாம் *தீக்ஷா* குருவாக செயல்படுவதைத் தெளிவாக அறிவுறித்தியிருக்கிறார். இருந்தபோதிலும், அவர் தம் உடலை விட்டுப் பிரிந்த பிறகு எத்தனையோ மாற்றங்கள் நடந்திருக்கின்றன. இவ்வாறு விலகியவர்கள் தம்முடைய தவறை நியாயப்படுத்த இன்று வரையிலும் முயற்சி செய்கின்றார்கள்.

ஆனால் நாட்கள் போகப் போக, விலகியவர்களுடைய குற்றங்கள் அதிகாரப்பூர்வமாகவும், அதிகாரப்பூர்வமின்றியும் வெளிப்படுவதால் அவர்கள் தங்களுடைய தவறான கருத்துகளை நியாயப்படுத்த முடியவில்லை. அங்கீகாரம் பெற்ற ஒரு ஆச்சார்யர் என்றுமே தன்னிலையிலிருந்து வீழ்ச்சியடையமாட்டார்; மாறாக, அத்தகைய அதிகாரம் பெறாதவர்கள் வீழ்ந்து போவார்கள்.

“ஒரு ஆன்மிக குரு ஏராளமான செல்வங்களையும், சீடர்களையும் பெற்றதினால் சுயக்கட்டுப்பாட்டினை இழந்துவிடக்கூடாது. ஓர் உண்மையான குரு ஒருபோதும் அப்படி ஆகமாட்டார். ஆனால் சிலசமயம், முறையாக அங்கீகரிக்கப்படாதவரோ அல்லது தன்னைத் தானே ஆன்மிக குருவாக நியமித்துக் கொண்டவரோ, ஏராளமான செல்வங்களையும், அடியவர்களையும் பெற்றததினால், சுயக்கட்டுப்பட்டினை இழந்து விடலாம். அதனால் அவருடைய பக்தித் தொண்டு தரமுடையதாக இருக்காது. இதுபோன்ற செயல்களால் ஒருவன் சுயக் கட்டுப்பாட்டினை இழந்துவிட்டான் என்றால் அவனுடைய பக்தித் தொண்டு தளர்ச்சியடைந்து விடும். ஆகையால் ஒருவன் தன்னை சீடப் பரம்பரையின் ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.”

- பக்தி ரசாம்ருத சிந்து, அத்தியாயம் பதினான்கு: பக்தி செய்வதற்கான தகுதிகள்

*தீக்ஷா* குருவுடைய தகுதி என்னவென்று நாம் முந்தைய அத்தியாயத்தில் படித்திருக்கிறோம். இவ்வத்தியாயத்தில் நாம் சாத்திர விளக்கங்களின் மூலமாக விலகுதலின் காரணமென்ன, விலகியவர்களுடைய நிலைமை என்ன, விலகியவர்களை பின்பற்றுவதால் வரக்கூடிய விளைவுகள், விலகுதல் பிரச்சினையை எப்படி சரிபடுத்துவது, உண்மையான நேர்மையான பக்தர்களை எப்படி கையாளுவது, மற்றும் பொறாமைப்படுவோரை எப்படி சமாளிப்பது போன்ற விஷயங்களை பார்ப்போம்.

## 3.1. திசை மாற்றம் - காரணங்கள்

முதலாவதாக, இவ்வகையான திசை மாற்றம் ஏன் நடக்கின்றன?

"மனித இனத்தின் முக்கியப்பணி எல்லாநேரமும் முழுமுதற்கடவுளை நினைப்பது, அவரது பக்தர்களாவது பரமபுருஷ பகவானை வழிபட்டு அவருக்கு அடிபணிவது போன்றவையாகும். இறைவனின் அதிகாரம் பெற்றுப் பிரதிநிதியான **ஆச்சாரியர்** இந்நெறிகளை நிறுவுகிறார். **ஆனால் அவர் மறையும் பொழுது இவையெல்லாம் மீண்டும் தலைகீழ் மாற்றமடைகின்றன.** ஆயினும் ஆச்சாரியாரின் நிறைவான சீடர்கள் தங்கள் குருவின் கட்டளைகளை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் இச்சூழ்நிலையை மாற்ற முயல்கிறனர்."

- ஸ்ரீமத் பாகவதம் 4.28.48-ன் பொருளுரை

ஆச்சாரியர் பூத உடலோடு நமது மத்தியில் இருக்கையில், வழிதவறிய சிஷ்யனை கட்டாயப்பூர்வமாக சரிப்படுத்தி நல்வழிக்கு கொண்டுவரலாம். ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் இதனை எண்ணற்ற முறைகள் செய்திருக்கிறார். ஆனால் ஆச்சார்யர், உடலை விட்டு பிரியும்போது அவருடைய பணியை செய்ய வேண்டிய பொறுப்பு அவரின் சிஷ்யர்களுடையதாகிறது. இவ்விடத்தில் அந்த சிஷ்யர்களின் நேர்மை முக்கியத்துவம் பெறுகிறது. சிஷ்யன் வேண்டுமென்றே *தீக்ஷா* குருவின் கட்டளையை பின்பற்றாமலிருக்கும் வேளையில், அந்நிலையைச் சரிபடுத்துவதற்கு ஒரு தகுதிவாய்ந்த *சிக்ஷா* குரு இல்லையென்றால், மிகப்பெரிய குழப்பம் உண்டாகும். இதுவே ஸ்ரீல பிரபுபாதரின் இயக்கத்திலும் நடந்தது.

விலகுதல்களுக்கு வழிவகுக்கும் மனப்பாங்கு சைதன்ய-சரிதாம்ருதாவில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது:

*'நிஷிதாசார', 'குடீனாதீ','ஜீவா-ஹிம்ஸன'*
*'லாப', 'பூஜா' 'பிரதிஷ்தாதி' யத உபஸாகா-கன*

"பக்தி எனும் கொடியுடன் சில தேவையற்ற கொடிகளும் வளர்கின்றன. அவை **பக்குவடைய முயற்சிப்பவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைக் கொடிகள்** ஆகும். அவை **தந்திரமான செயல்கள்**, மிருக வதை, பௌதிக லாபச் சிந்தனை, **போற்றப்படுவதற்கான ஆவல், முக்கியத்துவத்தை எதிர்பார்த்தல்** ஆகியவை ஆகும். இவை அனைத்தும் தேவையற்ற கொடிகளாகும்."

- சைதன்ய சரிதாம்ருதம் மத்திய லீலை 19.159

"என்னிடம் அடக்கியாளும் ஆவல் இருந்ததென்பதை நான் கண்டிப்பாகக் கூற முடியும். அதற்காகவே நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். "குரு!

மிக அருமை!! நான் இப்போது குரு, அதுவும் நாங்கள் பதினோரு பேர் மட்டுமே!!!". இது எனது பந்தப்படுத்தப்பட்ட நிலையின் உச்சகட்ட நிலை."

- தமால கிருஷ்ணரின் வாக்குமூலம், டிசம்பர் 3, 1980

ஆச்சாரியர் மற்றும் முழுமுதற்கடவுளின் விருப்பத்திற்கெதிராக, தன்னிச்சையான விருப்பங்களைக் கொண்ட அனுபவமற்ற சிஷ்யனை பிரிவினைவாதி என்று சொல்கிறோம். இவ்வாறு ஆன்மீக குருவிடமிருந்து மாறுபட்டு நடந்துகொள்ளுபவன் மிக பயங்கரமான தவறினை செய்கிறான். அவனுடைய பக்தி சேவையில் ரஜோ குணமும் தமோ குணமும் கலந்திருக்கின்றன என்பதனை நாம் புரிந்துகொள்ளலாம். இவ்வாறு அவன் ஆச்சார்யர் மீது பொறாமைகொண்டு, பேரும் புகழும் கிடைக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறான்.

*அபிஸந்தாய யோ ஹிம்ஸாம் தம்பம் மாத்ஸர்யமேவ வா*
*சம்ரம்பீ பிந்நத்ருக் பாவம் மயி குர்யாத்ஸ தாமாஸ்*

"**பொறாமை, தற்பெருமை, வன்முறை மற்றும் கோபம் கொண்டவராலோ மற்றும் மாறுபட்ட சிந்தனையாளராலோ** நிறைவேற்றப்படும் **பக்தித் தொண்டு** இருட்டாகிய (**தமோ) குணத்தில்** உள்ளதாகக் கருதப்படுகிறது."

- ஶ்ரீமத் பாகவதம் 3.29.8

*விஷயானபிஸந்தாய யச ஐஸ்வர்யமேவ வா*
*அர்ச்சாதாவர்ச்சயேத்யோ மாம் ப்ருதக்பாவ: ஸ ராஜஸ:*

"**மாறுபட்ட சிந்தனையாளரால்** கோவிலில், உலக **இன்பம், புகழ், பொருள்** இவற்றுக்கான நோக்கங்களுடன் செய்யப்படும் **தெய்வ வழிபாடு** ரஜோ குணத்தில் செலுத்தப்படும் பக்தியாகும்."

- ஶ்ரீமத் பாகவதம் 3.29.9

மேற்கண்ட பக்தன் மூன்றாவது நிலை பக்தனாக கருதப்படுகின்றான்.

*அர்ச்சயாம் ஏவ ஹரயே பூஜாம் ய: ஸ்ரத்தயேஹதே*
*ந தத்-பக்தேஷு சான்யேஷு ஸ பக்த: ப்ராக்ருத: ஸ்ம்ருத*

"எவன் ஆலயத்திலுள்ள ஶ்ரீ ஹரியின் விக்கிரத்தை மட்டும் சிரத்தியுடன் பூஜிக்கிறானோ ஆனால் பொது ஜனங்களிடமும், **பிற பக்தர்களிடமும் முறையாக நடந்து கொள்வதில்லையோ** அவன் ஆரம்பநிலையிலுள்ள பௌதிக பக்தன் (ப்ராக்ருத-பக்தன்) எனப்படுகிறான். அவன் மிகவும் கீழான நிலையில் இருப்பவனாகக் கருதப்படுகிறான்."

- ஶ்ரீமத் பாகவதம் 11.2.47

-

*ததோ 'ர்ச்சாயாம் ஹறிம் கேசித் ஸமஸ்ரத்தாய ஸபர்யயா*
*உபாஸத உபாஸ்தாபி நார்த்தா புருஷ-த்விஷாம்*

"சிலசமயம் **பக்குவமடையாத பக்தனொருவன்** விக்கிரகத்தை பகவானாகவே பாவித்து, உண்மையாகவே எல்லாப் பொருட்களையும் கொண்டு பகவானை வழிபடுகிறான். ஆனால் **பகவான் விஷ்ணுவின் அதிகாரப்பூர்வமான பக்தர்களிடம் அவன் பொறாமை கொண்டவனாக இருப்பதால், அவனுடைய பக்தித் தொண்டினால் பகவான் ஒருபோதும் திருப்தியடைவதில்லை.**"

- ஸ்ரீமத் பாகவதம் 7.14.40

ஒரு பக்தன் மூன்றாவது நிலையில் இருக்கும் வரையிலும், அவன் வழிதவற வாய்ப்புண்டு.

"**கிருஷ்ண பக்தியின் மூன்றாம் நிலையில் இருப்பவன், வீழ்ச்சியடைவதற்கு வாய்ப்புள்ளது**. ஆனால் இரண்டாம் நிலையில் இருப்பவன் வீழ்ச்சியடைவதில்லை, முதல் நிலை கிருஷ்ண பக்தன் வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்பே இல்லை."

- பகவத் கீதை 9.3 பொருளுரை

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் பக்தர்களுக்கு கண்டிப்பான சாதனை விதிமுறைகளை கட்டளையிட்டுள்ளார் - பதினாறு மாலை ஜபம் செய்வது, நான்கு விதிமுறைகளைப் பின்பற்றுவது, மங்கள ஆரத்திகாக காலையில் எழுவது, காலை பூஜை மற்றும் ஸ்ரீமத் பாகவதம் வகுப்பில் கலந்துகொள்வது, மற்ற சேவைகளில் ஈடுபடுவது, தெய்வத்திரு ஸ்ரீல பிரபுபாதா அவர்களின் புத்தகங்களை அனுதினமும் படிப்பது ஆகியவை போன்ற செயல்களைப் பின்பற்றாதவர்கள் நிச்சயமாக மூன்றாம் நிலையிலே இருப்பார்கள். இம்மாதிரியான பக்தர்களின் பக்குவமற்ற நடத்தை கண்டிப்பாக மற்ற பக்தர்களுக்கு பிரச்சனைகளை உண்டாக்கும்.

இன்று இஸ்கானில் பிரச்னை என்னவென்றால் பல மூத்த பக்தர்கள் வழி தவறிவிட்டதால் அவர்கள் மூன்றாம் நிலை பக்தர்கள் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான நபர்கள் குருவின் வேஷத்தில் இவ்வியக்கத்தினை நடத்தி வந்தால் விளைவு என்ன? முற்றிலும் குழப்பமான சூழ்நிலைதான் உருவாகும்.

## 3.2 : திசைமாறிச் சென்றவர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றுபவர்களின் கதி

மாயை சந்தேகத்திற்கிடமின்றி மிக மிக வலிமைவாய்ந்ததென்பதால், சில தருணங்களில் துறவு வாழ்வை மேற்கொண்ட ஒரு சந்நியாசி கூட வழி தவறிச்செல்லலாம். ஆனால் உண்மையான ஆன்மீக குரு என்றுமே வழி தவற மாட்டார். இத்தகைய ஆன்மிக குரு தகுதி வாய்ந்தவர் என்பதையும் தமது குருவிடமிருந்து அதிகாரம் பெற்றவர் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

1977-ம் ஆண்டிலிருந்து நாம் இஸ்கான் வரலாற்றினை பார்த்தோமானால் குருக்கள் பலர் வழிதவறித் தவறான செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். வீழ்ச்சியடையும் அந்தப் பெயரளவுக் குருக்கள் எவ்வகையான பக்தர்கள்? இவர்கள் மூன்றாம்தர பக்தர்கள் தான் என்பதில் சந்தேகமே இல்லை. இப்படிப்பட்டவர்கள் எப்படி குருவாகலாம்?

இவர்கள் உண்மையில் ஸ்ரீல பிரபுபாதா அவர்களால் சீடப்பரம்பரையைத் தொடர்வதற்கு அங்கீகாரம் பெற்றவராயின், இவர்கள் முதற்கண் எவ்வாறு வீழ்ச்சியடைவார்கள்? சிலரின் தவறுகள் நமக்கு வெளிப்படையாக தெரிந்துவிட்டன; ஆனால் இன்னும் பலரின் குற்றங்கள் அதிகாரபூர்வமாக வெளிப்படவில்லை. ஏனென்றால் இஸ்கான் இயக்கத்தின் கருத்தில் பாலியல் சம்மந்தப்பட்ட தவறுகள்தான் குற்றங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பக்திசேவையிலிருந்து **வீழ்ச்சியடைதலென்பது**, ஒருவர் புலன் **நுகர்ச்சிப் பாதைகளில் ஈடுபடுவதையோ அல்லது மாயாவாதக்கருத்துக்களால் கவரப்படுவதையோ** குறிக்கும். விஷ்ணுவின் வாகனமாகிய கருடனை மனதளவில் புண்படுத்திய காரணத்தால், யோகத்தின் முதிர்ந்த பக்குவத்தில் இருந்த போதிலும், சௌபரி முனி காம இச்சைகளால் உந்தப்பட்டு ஐம்பது ராஜ குமாரிகளை மணம்புரிந்தார்.

மாதவேந்திர பூரியின் சிஷ்யர் ராமச்சந்திர பூரி, தனது ஆன்மீக குருவை நிந்தித்த காரணத்தால் மாயாவாதியாக மாறினார். நாம் இந்த உதாரணங்களை புரிந்துகொண்டு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இந்த விளைவுகள் இரண்டுமே இன்று இஸ்கானில் காணப்படுகின்றன. ஆயினும் இஸ்கான் இயக்கத்தில் மாயாவாதக் கருத்துக்களால் கவரப்படுவதை வீழ்ச்சியாகவோ அல்லது விலகுதலாகவோ கருதுவதில்லை. பிரபுபாதா அவர்கள் என்றுமே *தீக்ஷா* குருவாகும் அதிகாரத்தை யாருக்கும் வழங்கியதில்லை. ஆகவே தானே அந்த அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டவர்களும், தன் கடமையிலிருந்து தவறிய ஆட்சிக்குழு ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் அவ்வதிகாரத்தை ஏற்றுக்கொண்டவர்களும், நிச்சயமாக ஸ்ரீல பிரபுபாதரின் தாமரைப் பாதத்தில் மிகப்பெரும் குற்றமிழைத்தவர்களேயாவர். இதற்கான விளைவுகள் காலத்தினால் நிச்சயம் வெளிக்கொணரப்படும். இவ்வாறான வீழ்ச்சிகள் இஸ்கான் இயக்கத்தில் நடக்க வேண்டும் என்று நாங்கள் பிரார்திக்கவில்லை. தூய பக்தரும், இஸ்கானின் ஸ்தாபக ஆச்சார்யருமாகிய தெய்வத்திரு ஸ்ரீல பிரபுபாதா அவர்களை புண்படுத்துவதனால் ஏற்படக்கூடிய நியாயமான விளைவுகளைத்தான் நாங்கள் கூறுகின்றோம்.

பின்வரும் பகுதியில் சாத்திரத்தின் துணைகொண்டு துறவிற்கான இலக்கணங்களை நாம் ஆய்வோம். இஸ்கான் இயக்கத்தின் பெயரளவு குருமார்கள் ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளையை மீறிய காரணத்தாலே கீழ்காணும் துறவின் இலக்கணத்தை அவர்களால் கடைபிடிக்கமுடியவில்லை.

*பதாபி யுவதீம் பிக்ஷுர் ந ஸ்ப்ருசேத் தாரவீம் அபி*
*ஸ்ப்ருசன் கரீவ பத்யேத கரிண்யா அங்க- ஸங்கத:*

“ஒரு சாது ஓர் இளம் பெண்ணை ஒருபோதும் தொடக்கூடாது. உண்மையில் மரத்தாலான ஒரு பெண் பொம்மையானாலும் அதைத் தன் காலால் கூட அவன் தொடக்கூடாது. பெண் யானையின் உடலைத் தொடும் விருப்பத்தினால் ஆண் யானை காட்டில் அகப்படுவது போல்,ம் ஒரு பெண்ணுடனான உடல் தொடர்பினால் ஒரு சாது மாயையால் கைப்பற்றப்படுவது நிச்சயம்.”

- ஸ்ரீமத் பாகவதம் 11.8.13

*ஸ்த்ரீணாம் நிரீக்ஷண-ஸ்பர்ச- ஸம்லாப-க்ஷ்வேலனாதிகம்*
*ப்ராணினோ மிதுனீ-பூதான் அக்ருஹஸ்தோ 'க்ரதஸ் த்யஜேத்*

“திருமணம் செய்து கொள்ளாதவர்கள் (சந்நியாசிகள், வானப்பிரஸ்தர்கள் மற்றும் பிரம்மச்சாரிகள்) பெண்களைப் பார்ப்பது, தொடுவது, அவர்களுடன் பேசுவது, பரிகாசம் செய்வது அல்லது விளையாடுவது முதலியவற்றைச் செய்யக்கூடாது. ஜீவராசிகள் புணர்வதையும் அவர்கள் பார்க்கக் கூடாது.”

- ஸ்ரீமத் பாகவதம் 11.17.33

*யதி ந ஸமுத்திரந்தி யதயோ ஹ்ருதி காம-ஜடா*
*துரதிகமோ 'ஸதாம் ஹ்ருதி கதோ 'ஸ்ம்ருத-கண்ட-மணி:*
*அஸு-த்ருப-யோகினாம் உபயதோ 'பி அஸுகம் பகவன்*
*அனபகதாந்தகாத் அனதிரூட-பதாத் பவத:*

“துறவு வாழ்வை மேற்கொண்ட பிறகும், தங்களது இதயங்களிலுள்ள பௌதிக ஆசைகளின் சுவடுகளை வேரோடு பிடுங்கி எறியத் தவறியவர்கள் தூய்மையற்றவர்களாகவே உள்ளனர். இதனால் அவர்கள் உம்மைப் புரிந்து கொள்ள நீர் அனுமதிப்பதில்லை. கழுத்தில் அணிந்திருக்கும் இரத்தினத்தை மறந்துவிட்டவனைப் போல், அவர்களது இதயங்களில் உறையும் உம்மை அவர்கள் முழுமையாக மறந்துள்ளனர். பகவானே, புலனின்பத்திற்காக மட்டுமே யோகம் பயில்பவர்கள் இப்பிறவியிலும், அடுத்ததிலும் தண்டனையை அனுபவிக்க வேண்டும்: அதாவது, அவர்களை விட்டு விலகாத மரணத்திலிருந்தும், யாருடைய இராஜ்யத்தை அவர்களால் அடைய முடியாதோ, அத்தகைய உம்மிடமிருந்தும் அவர்கள் தண்டனையை அனுபவித்தாக வேண்டும்.”

- ஸ்ரீமத் பாகவதம் 10.87.39

“மத உணர்ச்சியுடையவர்கள் எனப் பொய்யாக நடித்து, பக்தித் தொண்டாற்றுபவர்களாகக் தம்மைக் காட்டிக் கொண்டு எல்லாவகையான ஒழுங்கீனங்களிலும் அவர்கள் ஈடுபடுகின்றனர். இப்படியாக அவர்கள் ஆன்மீக குருமார்களாகவும், கடவுளின் பக்தர்களாகவும் பெயர் பெற்றுவிடுகின்றனர். தார்மீகக் கொள்கைகளை இவ்வாறு மீறுபவர்கள் அதிகாரப் பூர்வமான சிஷ்யப் பரம்பரையில் வந்துள்ள ஆச்சார்யர்களை மதிப்பதில்லை. பாமர மக்களை திசை

திருப்பும் நோக்கம் கொண்ட இவர்கள் தம்மை ஆச்சாரியார் என்று சொல்லிக் கொள்கிறார்கள்; ஆனால் ஆச்சாரியரின் கொள்கைகளை அவர்கள் கடைபிடிப்பதில்லை. இந்த அயோக்கியர்கள் மனித சமுகத்தின் மிக அபாயகரமான சக்திகள். மதச்சார்புள்ள அரசாங்கங்கள் இல்லாததால் இவர்கள் தண்டனை பெறாமல் தப்பமுடிகிறது. ஆனால் பரம்பொருளின் நியதிகளிலிருந்து அவர்கள் தப்பமுடியாது. மதப்பிரச்சாரகர்களின் உருவில் வட்டமிடும் பொறாமைமிக்க அசுரர்கள் இருள் சூழ்ந்த நரகத்தில் தள்ளப்படுவார்களென்று பகவான் பகவத் கீதையில் (16:19-20) கூறியுள்ளார். இந்தப் போலியான மதப்பிரச்சாரகர்கள் தம் புலன்களை திருப்தி செய்வதற்காக ஆன்மீக குருமார்கள் வேஷத்தில் நடித்து முடித்த பின்னர் பிரபஞ்சத்தின் மிக வெறுக்கத்தக்க பகுதிகளில் சென்றடைவார்களென்று ஈஷோபநிஷதம் உறுதி செய்கிறது."

- ஈஷோபநிஷம் மந்திரம் 12-ன் பொருளுரை

*ஷ்ருதி-ஸ்ம்ருதி-புராணாதி-பஞ்சராத்ரா-விதிம் வினா*
*ஐகாந்திகீ ஹரேர் பக்திர் உத்பாதாயைவ கல்பதே*

"உபநிஷங்கள், புராணங்கள், நாரத பாஞ்சராத்ரம் போன்ற *அங்கீகரிக்கப்பட்ட* வேத சாத்திரங்களை அலட்சியப்படுத்திய நிலையில் செய்யப்படும் பக்தித் தொண்டு, சமுதாயத்தில் தேவையற்ற தொந்தரவே"

- பக்தி ரஸாம்ருத சிந்து 1.2.101

இவ்வகையான குற்றவாளிகளை பின்பற்றுபவர்களின் கதி என்னவாகும்?

*தேஷாம் குபத-தேஷ்ட்ரீனாம் பததாம் தமஸி ஹி அத:*
*யே ஸ்ரத்தத்யூர் வசஸ் தே வை மஜ்ஜன்ட்டி அஸ்ம-ப்லவா இவ*

"அறியாமையில் விழுந்து விட்டவர்களும், **மக்களை அழிவுப்பாதையில் தவறாக வழிநடத்திச் செல்பவர்களுமான தலைவர்கள், உண்மையில் கல்லினால் செய்யப்பட்ட ஒரு படகில் ஏறிக் கொள்பவர்களைப் போன்றவர்களாவர்.** கல்லாலான ஒரு படகு மிதக்க முடியாமல் அதிலுள்ள பயணிகளுடன் நீரில் மூழ்கிவிடும். அதுபோலவே, மக்களைத் தவறாக வழிநடத்திச் செல்பவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள். அவர்களைப் பின்பற்றிச் செல்வோரும் நரகத்திற்கே செல்வார்கள்."

- ஸ்ரீமத் பாகவதம் 6.7.14

## 3.3 : இந்நிலையை சீர் திருத்துவது எவ்வாறு?

இக்கேள்விக்கான பதில் மிக எளிமையானது. ஸ்ரீல பிரபுபாதா அவர்களது உபதேசங்களை மறுதலிப்பதை நிறுத்தி, *ரித்விக்* அமைப்பு *தீக்ஷை* முறையை பின்பற்ற வேண்டும். இஸ்கான் தலைவர்கள் இதனைப் பின்பற்றினால், அதனை

விட ஒரு சிறந்த காரியம் வேறேதுமில்லை;நாமும் அவர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்போம்.

ஆனால் அவர்கள் இவ்வாறு செய்யவில்லை எனில் நாம் அவர்களுக்கு ஆதரவு கொடுக்க முடியாது. இஸ்கான் நிர்வாகம் ஸ்ரீல பிரபுபாதரின் கட்டளைக்கு எதிரான நிலையை மாற்றும் வரை, ஸ்ரீல பிரபுபாதரை *தீக்ஷா*

குருவாக ஏற்றுக்கொள்ளும் ஒத்த மன நிலையுடைய பக்தர்களுடன் இணைந்து தனித்து செயல்படுவதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை. இந்நிலைக்குத் தீர்வு காண விரும்புவோர், ஆன்மீக குருவின் உபதேசங்களே ஒவ்வொரு சீடனுக்கும் அதிமுக்கியமான வழிகாட்டியாகும் என்ற உண்மையை முதன்முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அவருடைய கட்டளையை எப்போதும் புறக்கணிக்கக்கூடாது.

*ஆசார்யம் மாம் விஞ்ஞானியான் நாவமன்யேத கர்ஹிசித்*
*ந மர்த்ய-புத்தாஸூயதே ஸர்வ-தேவ-மயோ குரு:*

"**ஆச்சாரியரை நானாகவே ஒருவன் அறிந்து அவரை எவ்விதத்திலும் அவமதிக்கக்கூடாது.** அவர் அனைத்து தேவர்களின் பிரதிநிதி என்பதால் அவரை ஒரு சாதாரண மனிதர் என்றெண்ணி அவரிடம் ஒருவன் பொறாமை கொள்ளக் கூடாது."

- ஸ்ரீமத் பாகவதம் 11.17.27

*மஹதாம் பஹுமானேன தீனானாமனுகம்பயா*
*மைத்ர்யா சைவாத்மாதுல்யேஷுயமேன நியமேன ச*

"**தூய பக்தர் ஆன்மிக குரு மற்றும் ஆச்சாரியர்களுக்கு மிகச்சிறந்த மதிப்புத் தருவதன் மூலம்** பக்தித் தொண்டு புரியவேண்டும். அவர் கிருஷ்ண உணர்வற்றோருடன் கருணையுள்ளவராய் இருக்க வேண்டும், அவருக்குச் சமமானவர்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் அவரது எல்லாச் செயல்களும் ஒழுங்கு மற்றும் புலன்களின் கட்டுப்பாடுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.."

- ஸ்ரீமத் பாகவதம் 3.29.17

"ஆன்மீக குரு பரம புருஷருக்குச் சமமானவர். எனவே ஆன்மீக முன்னேற்றத்தில் நாட்டம் கொண்டுள்ளவன் ஆன்மீக குருவை இதே முறையில் ஏற்றுக்கொள்ளவேண்டும். **இதிலிருந்து சிறிது விலகினாலும் சீடனின் வேதக்கல்விகளிலும், தவங்களிலும் பெறும் நாசம் ஏற்பட்டுவிடும்.**"

- ஸ்ரீமத் பாகவதம் 7.15.27 பொருளுரை

ஆதலால் நாம் ரித்விக் *தீக்ஷை* முறையை எல்லா சாத்திர மற்றும் ஆவண ஆதாரங்களையும் கொண்டு முற்றிலும் உணர்ந்துகொண்டு, அதனின் உண்மைத்தன்மையை நேர்மையான பக்தர்களுடன் வெளிப்படையாக பேச வேண்டும்.

இவ்வாறு விலகும் இஸ்கானுடனான சங்கத்தை நிராகரிப்பதனால் நாம் மூத்த வைஷ்ணவர்களை புண்படுத்தமாட்டோமா என்ற கேள்வி ஒருவர் மனதில் எழலாம். ஆனால் இஸ்கானில் ஸ்ரீல பிரபுபாதா அவர்களைவிட மூத்த வைஷ்ணவர் யார் இருக்கிறார்? அவருடைய தாமரைப் பாதங்களை நாம் எப்படி புண்படுத்த முடியும்? அதே நேரத்தில் மற்றவர்கள் அவரைப் புன்படுத்துபவர்களையும் நாம் எப்படி சகித்துக் கொள்ள முடியும்? வேண்டுமென்றே ஸ்ரீல பிரபுபாதா அவர்களை புண்படுத்தும் ஒருவரை, வைஷ்ணவர் என்று அழைக்க முடியுமா? நேர்மையான பக்தர்கள் இவ்விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

## 3.4 : கருத்து வேற்றுமை கொண்டவரை கையாளும் முறை

உண்மை நிலையை அறிந்த அப்பாவி பக்தர்களுக்கு நாம் இப்புத்தகத்தில் உள்ளபடி சாஸ்திர ஆதாரங்களுடன் தெளிவாக விளக்கி உதவலாம். ஆனாலும், ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் முழுமையாக அங்கீகரித்த பின்பும் *ரித்விக் தீக்ஷை* முறையை தீவிரமாக எதிர்க்கும் பலர் இருக்கத்தான் செய்வர். இப்படிப்பட்டவர்களை எந்த முறையில் கையாள்வதென்பதை நாம் பின்வரும் ஸ்லோகங்கள் மூலமாக அறிவோம்.

*ந ஸபாம் ப்ரவிசேத் பராஜ்ஞ: ஸப்ய-தோஷான் அருஸ்மரன்*
*அப்ருவன் விருவன்ன் அஜ்ஞோ நர: கில்பிஷம் அஸ்னுதே*

“ஒரு கூட்டத்தில் உள்ளவர்கள், முறையற்றச் செயல்களைச் செய்கின்றவர்கள் என்று ஒரு புத்திமான் அறிந்து கொண்டானென்றால் அவன் அக்கூட்டத்திற்குச் செல்லக்கூடாது. ஒருவேளை அவன் அக்கூட்டத்தில் பங்கு பெற நேர்ந்து அவன் உண்மை பேசாவிட்டாலோ, பொய்யுரைத்தாலோ, அல்லது ஒன்றும் அறியாதவன் போல தன்னைக் காட்டிக் கொண்டாலோ, அவன் நிச்சயம் பாவம் எய்துவான்.”

- ஸ்ரீமத் பாகவதம் 10.44.10

*நிந்தாம் பாகவதஹ ஸ்ருன்வம்ஸ் தத்-பரஸ்ய ஜனஸ்ய வா*
*ததோ நாபைதி யஹ ஸோ 'பி யாதி அதஹ சுக்ருதாச் சுதஹா*

“பகவத் நிந்தனையையோ, பகவத் பக்தனின் மீதான நிந்தனையையோ கேட்டுக் கொண்டு எவன் அந்த இடத்தைவிட்டு அகலாதிருக்கிறானோ, அவனும் தன் புண்ணியங்களை இழந்து கீழே விழுவான்.”

- ஸ்ரீமத் பாகவதம் 10.74.40

*ஈஸ்வரே தத் அதீனேஷு பாலிசேஷு த்விஷத்ஸு ச*
*ப்ரேம-மைத்ரீ-க்ருபோபேக்ஷா ய: கரோதி ஸ மத்யம:*

“மத்யம-அதிகாரி எனப்படும் இரண்டாம்தர பக்தன் பரம புருஷரிடம் தனது அன்பைச் செலுத்துவதோடு, பகவானின் எல்லா பக்தர்களிடமும் உண்மையான நட்பும் கொள்கிறான். அவன் சூதறியாத அப்பாவி பக்தர்களிடம் கருணை காட்டுவதோடு, **பரமபுருஷரிடம் விரோதம் கொண்டவரைப் புறக்கணிக்கவும் செய்கிறான்.**”

- ஸ்ரீமத் பாகவதம் 11.2.46

அதுபோல, ஸ்ரீல பிரபுபாதா போன்ற பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பக்தர்களிடம் பொறாமைப்படுவோரை நாம் நிராகரிக்க வேண்டும். அதாவது, இஸ்கானின் ஒரே *தீக்ஷா* குருவாகிய ஸ்ரீல பிரபுபாதரைக் கண்டு அவர்கள் பொறாமை கொள்வதால் நாம் அத்தகையோரை அலட்சியப்படுத்த வேண்டும்.

*மஹதாம் பஹுமானேன தீனானாமனுகம்பயா*
*மைத்ர்யா சைவாத்மாதுல்யேஷுயமேன நியமேன ச*

“**தூய பக்தர் ஆன்மிக குரு மற்றும் ஆச்சாரியர்களுக்கு மிகச்சிறந்த மதிப்புத் தருவதன் மூலம்** பக்தித் தொண்டு புரியவேண்டும். அவர் கிருஷ்ண உணர்வற்றோருடன் கருணையுள்ளவராய் இருக்க வேண்டும், அவருக்குச் சமமானவர்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் அவரது எல்லாச் செயல்களும் ஒழுங்கு மற்றும் புலன்களின் கட்டுப்பாடுடன் நிறைவேற்றப்பட வேண்டும்..”

- ஸ்ரீமத் பாகவதம் 3.29.17

“நட்பு என்பது ஒரே ஆர்வமும், புரிந்துகொள்ளும் தன்மையும் படைத்தவர்களுக்கிடையில் நிகழவேண்டும். அந்த மனிதர்கள் **ஸ்வ-ஜாதி** “அதே இனத்தினர்” என்று கூறப்படுகின்றனர். ஒரு பக்தர் தரமான புரிந்து கொள்ளலில் நிலைக்காத நடத்தையையுடைய மனிதரைத் தவிர்க்க வேண்டும். அவர் வைஷ்ணவராகவோ, அல்லது கிருஷ்ண பக்தராகவோ இருந்தாலும், அவரது நடத்தை சரியாக இல்லாவிட்டால், அவர் தவிர்க்கப்படுதல் வேண்டும். ஒருவர்

நிலையாக புலன்களையும் மனதையும் கட்டுப்படுத்த வேண்டும். அவர் அதே தரத்தில் உள்ளவர்களுடன் நட்புக் கொள்ளவேண்டும்.”

- ஸ்ரீமத் பாகவதம் 3.29.17 பொருளுரை

# முடிவுரை

நீங்கள் இப்புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ள ஆவண மற்றும் சாத்திர ஆதாரங்களை படித்தப்பின்பு ஸ்ரீல பிரபுபாதா அவர்கள்தான் இஸ்கானுடைய ஒரே *தீக்ஷா* குரு என்று உறுதியாகth தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். அவர் தம் உடலினை விட்டு பிரிந்த பின்புகூட இதுதான் உண்மை. *ரித்விக்* அமைப்பு *தீக்ஷை* முறையை அங்கீகரிக்க ஆவண மற்றும் சாத்திர ஆதாரங்கள் இல்லை என்றோ இந்த *தீக்ஷை* முறை குரு பரம்பரையில் இல்லை என்றோ யாராவது கூறினால் அவ்வாக்கு ஆதாரமற்றது.

ஆனால் இதையெல்லாம் படித்த பின்புகூட ஒருவருக்கு இந்த வழிமுறைகளில் நம்பிக்கை இல்லை என்றாலோ, அவர் வேண்டுமென்றே அங்கீகாரம் பெற்ற *ரித்விக் தீக்ஷை* முறையை பின்பற்றாமல் ஸ்ரீல பிரபுபாதாவின் கட்டளையை நிராகரித்தால், அவரின் கதி என்னவென்று நாம் பின்வரும் பகவத் கீதை ஸ்லோகங்களிருந்து அறிந்துக்கொள்ளலாம்.

*அக்ஞஷ் சாஷ்ரத்ததானஷ் ச ஸம்ஷயாத்மா வினஷ்யதி*
*நாயம் லோகோ 'ஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்ஷயாத்மன:*

- ஸ்ரீமத் பகவத் கீதை 4.40

“ஆனால், சாஸ்திரங்களை சந்தேகிக்கும் நம்பிக்கையற்ற முட்டாள் மனிதர்கள், இறையுணர்வை அடைவதில்லை; அவர்கள் வீழ்ச்சியடைகின்றனர். சந்தேகம் கொள்ளும் ஆத்மாவிற்கு இவ்வுலகிலோ மறு உலகிலோ இன்பம் இல்லை.”

*ய: ஷாஸ்த்ர-விதிம் உத்ஸ்ருஜ்ய வர்த்ததே காம-காரத:*
*ந ஸ ஸித்திம் அவாப்னோதி ந ஸுகம் பராம் கதிம்*

“சாத்திர விதிகளைப் புறக்கணித்து தனது மனம்போன போக்கில் செயல்படுபவன், பக்குவத்தையோ, சுகத்தையோ, பரம இலக்கையோ அடைவதில்லை.”

- ஸ்ரீமத் பகவத் கீதை 16.23

மேலும் விளக்கங்களை நாடுவோர் எந்தவித தயக்கமுமின்றி எங்களை மின்னஞ்சல் மூலமாக தொடர்புக்கொள்ளலாம்- admin@srikrishnamandir.org.

ஜெய ஸ்ரீல பிரபுபாதா! ஹரே கிருஷ்ணா!

[முற்றிற்று]

# பிற்சேர்க்கை அ : ஸ்ரீல பிரபுபாதரின் உயில் அறிவிப்பு (உள்ளபடி அளிக்கப்பட்டுள்ளது)

Tridandi Goswami

**A.C. Bhaktivedanta Swami**

Founder-Acharya:
International Society for Krishna Consciousness

CENTER: Krsna-Balarama Mandir,
Bhaktivedanta Swami Marg,
Ramanareti, Vrndavana, U.P.

DATE ........June.............................19.77..

**DECLARATION OF WILL**

I, A.C. Bhaktivedanta Swami Prabhupada, founder-acarya of the International Society for Krishna Consciousness, Settlor of the Bhaktivedanta Book Trust, and disciple of Om Visnupada 108 Sri Srimad Bhaktisiddhanta Sarasvati Gosvami Maharaj Prabhupada, presently residing at Sri Krsna-Balarama Mandir in Vrndavana, make this my last will:

1. The Governing Body Commission (GBC) will be the ultimate managing authority of the entire International Society for Krishna Consciousness.

2. Each temple will be an ISKCON property and will be managed by three executive directors. The system of management will continue as it is now and there is no need of any change.

3. Properties in India will be managed by the following executive directors:
   - a) Properties at Sri Mayapur Dhama, Panihati, Haridaspur and Calcutta: Gurukrpa Swami, Jayapataka Swami, Bhavananda Gosvami and Gopal Krsna das Adhikari.
   - b) Properties at Vrndavana: Gurukrpa Swami, Akshoyananda Swami, and Gopal Krsna das Adhikari.
   - c) Properties at Bombay: Tamal Krsna Gosvami, Giriraj das Brahmachary, and Gopal Krsna das Adhikari.
   - d) Properties at Bhubaneswar: Gour Govinda Swami, Jayapataka Swami, and Bhagawat das Brahmachary.
   - e) Properties at Hyderbad: Mahamsa Swami, Sridhar Swami, Gopal Krsna das Adhikari and Bali Mardan das Adhikari.

The executive directors who have herein been designated are appointed for life. In the event of the death or failure to act for any reason of any of the said directors, a successor director or directors may be appointed by the remaining directors, provided the new director is my initiated disciple following strictly all the rules and regulations of the International Society for Krishna Consciousness as detailed in my books, and provided that there are never less than three (3) or more than five (5) executive directors acting at one time.

4. I have created, developed, and organized the International Society for Krishna Consciousness, and as such I hereby will that none of the immovable properties standing in the name of ISKCON in India shall ever be mortgaged, borrowed against, sold, transferred, or in any way encumbered, disposed of, or alienated. This direction is irrevocable.

5. Properties outside of India in principle should never be mortgaged, borrowed against, sold, transferred or in any way encumbered, disposed of, or alienated, but if the need arises, they may be mortgaged, borrowed against, sold, etc., with the consent of the GBC committee members associated with the particular property.

~~6TH~~ 7TH JUNE 1977

Tridandi Goswami
**A.C. Bhaktivedanta Swami**
Founder Acharya:
International Society for Krishna Consciousness

6. The properties outside of India and their associated GBC committee members are as follows:

a) Properties in Chicago, Detroit and Ann Arbor: Jayatirtha das Adhikari, Harikesa Swami, and Balavanta das Adhikari.
b) Properties in Hawaii, Tokyo, Hong Kong: Guru Krpa Swami, Rameswara Swami, and Tamal Krsna Gosvami.
c) Properties in Melbourne, Sydney, Australia Farm : Guru Krpa Swami, Hari Sauri, and Atreya Rsi.
d) Properties in England (London Radlett), France, Germany, Netherlands, Switzerland and Sweden: Jayatirtha das Adhikari, Bhagavan das Adhikari, Harikesa Swami.
d) Properties in Kenya, Mauritius, South Africa: Jayatirtha das Adhikari, Brahmananda Swami, Atreya Rsi.
e) Properties in Mexico, Venezuela, Brazil, Costa Rica, Peru, Ecuador, Colombia, Chile: Hrdayananda Gosvami, Panca Dravida Swami, Brahmananda Swami.
f) Properties in Georgetown, Guyana, Santo Domingo, St. Augustine: Adi Kesava Swami, Hrdayananda Gosvami, Panca Dravida Swami.
g) Properties in Vancouver, Seattle, Berkeley, Dallas: Satsvarupa Gosvami, Jagadisa das Adhikari, Jayatirtha das Adhikari.
h) Properties in Los Angeles, Denver, San Diego, Laguna Beach: Rameswara Swami, Satsvarupa Swami, Adi Kesava Swami.
i) Properties in New York, Boston, Puerto Rico, Port Royal, St. Louis, St. Louis Farm: Tamal Krsna Gosvami, Adi Kesava Swami, Rameswara Swami.
j) Properties in Iran: Atreya Rsi, Bhagavan das Adhikari, Brahmananda Swami.
k) Properties in Washington D.C., Baltimore, Philadelphia, Montreal and Ottawa: Rupanuga das Adhikari, Gopal Krsna das Adhikari, Jagadisa das Adhikari.
l) Properties in Pittsburgh, New Vrndavana, Toronto, Cleveland, Buffalo: Kirtanananda Swami, Atreya Rsi, Balavanta das Adhikari.
m) Properties in Atlanta, Tennessee Farm, Gainesville, Miami, New Orleans, Mississippi Farm, Houston: Balavanta das Adhikari, Adi Kesava Swami, Rupanuga das Adhikari.
n) Properties in Fiji: Hari Sauri, Atreya Rsi, Vasudev.

7. I declare, say and confirm that all the properties, both movable and immovable, which stand in my name, including current accounts, savings accounts and fixed deposits in various banks, are the properties and assets of the International Society for Krishna Consciousness, and the heirs and successors of my previous life, or anyone claiming through them, have no right, claim or interest in these properties whatsoever, save and except as provided hereafter.

8. Although the money which is in my personal name in different banks is being spent for ISKCON and belongs to ISKCON, I have kept a few deposits specifically marked for allocating a monthly allowance of Rs. 1,000/- each to the members of my former family (two sons, two daughters, and wife). After the deaths of the members of my former family, these specific deposits (corpus, interests, and savings) will become the property of ISKCON for the corpus of the trust, and the descendants of my former family or anybody claiming through them shall not be allowed any further allowance.

9. I hereby appoint Guru Krpa Swami, Hrdayananda Gosvami, Tamal Krishna Gosvami, Rameshwar Swami, Gopal Krishna das Adhikari, Jayatirtha das Adhikari, Bhagavan das Adhikari and Giriraj das Brahmachary to act as executors of this will. I have made this will this 4th day of June, 1977, in possession of full sense and sound mind without any persuasion, force or compulsion from anybody.

Witnesses: 1. Dr Hiranmaya Ghosh

A.C. Bhaktivedanta Swami

V. K. ARORA, Advocate, Barrister at Law, MATHURA

7.6.77

6TH JUNE 1977

# பிற்சேர்க்கை அ : ஸ்ரீல பிரபுபாதரின் உயில் அறிவிப்பு (தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது)

திரிதண்டி கோஸ்வாமி
ஏ.சி. பக்திவேதாந்த சுவாமி
நிறுவனர்-ஆச்சார்யா:
அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்

இடம் : கிருஷ்ண பலராம கோயில்,
பக்திவேதாந்த சுவாமி மார்க்,
ராமன்ரேட்டி, விருந்தாவனம், உத்திர பிரதேசம்,
தேதி : ஜூன் 1977

## உயில் அறிவிப்பு

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் நிறுவன ஆச்சாரியாரும், பக்திவேதாந்த புத்தக நிறுவனத்தின் நிறுவனரும், ஓம் விஷ்ணுபாத 108 பக்திசித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி மகாராஜா பிரபுபாதரின் சீடனும், தற்போது விருந்தாவனத்தின் கிருஷ்ண பலராம கோயிலில் வசிப்பவனுமான அ. ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதாவாகிய என்னுடைய இறுதி உயில் பின்வருமாறு:

1. **ஆட்சி குழு ஆணையமே (GBC) அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் உச்சகட்ட நிர்வாக அமைப்பாகும்.**

2. எல்லா ஆலயங்களுமே இஸ்கானின் சொத்தாகும். அவை மூன்று நிர்வாக இயக்குனர்களால் நிர்வகிக்கப்படவேண்டும். நிர்வாக முறையானது இப்போதுள்ளபடியே நடக்கவேண்டும். **இதனை மாற்றம் செய்ய எந்த அவசியமுமில்லை.** .

3. இந்தியாவில் உள்ள சொத்துகளை கீழ்கண்ட நிர்வாக இயக்குனர்கள் நிர்வகிப்பார்கள்:

   அ) ஸ்ரீதாம் மாயாப்பூர், பனிஹட்டி, ஹரிதாஸ்பூர் மற்றும் கோல்கத்தா சொத்துகள் : குருகிருபா சுவாமி, ஜெயபதக சுவாமி, பவானந்த கோஸ்வாமி மற்றும் கோபால கிருஷ்ண தாஸ் அதிகாரி

   ஆ) விருந்தவன சொத்துகள்: குருகிருபா சுவாமி, அக்ஷோயநந்த சுவாமி மற்றும் கோபால கிருஷ்ண தாஸ் அதிகாரி

இ) பாம்பே சொத்துகள்: தமால கிருஷ்ண கோஸ்வாமி, கிரிராஜ் தாஸ் பிரம்மச்சாரி மற்றும் கோபால கிருஷ்ண தாஸ் அதிகாரி

ஈ) புவனேஸ்வர் சொத்துகள்: கௌர கோவிந்த சுவாமி, ஜெயபதக சுவாமி மற்றும் பகவத் தாஸ் பிரம்மச்சாரி.

உ) ஹைதராபாத் சொத்துகள்: மஹாம்ஸ சுவாமி, ஸ்ரீதர் சுவாமி, கோபால கிருஷ்ண தாஸ் அதிகாரி மற்றும் பலி மர்தன தாஸ் அதிகாரி.

இந்த உயிலின் மூன்றாவது பகுதியில் (Point 3), இந்தியாவிலுள்ள அனைத்து சொத்துக்களும் மூன்று நிர்வாக இயக்குனர்களால் நிர்வகிக்கப்படுமென்றும், அந்த சொத்துக்களின் விவரமும், அதன் நிர்வாக இயக்குனர்களின் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீல பிரபுபாதர் கூறுகிறார்: "இந்த நிர்வாக இயக்குனர்கள் தமது வாழ்நாள் முழுவதற்குமாக நியமிக்கப்படுகின்றனர். நிர்வாக இயக்குனர்களின் மரணமோ அல்லது தங்களது கடமையைச் செய்யமுடியாத சூழலோ உருவானால் எஞ்சியுள்ள நிர்வாக இயக்குனரால்/இயக்குனர்களால், புதிய நிர்வாக இயக்குனரோ/இயக்குனர்களோ நியமிக்கப்படலாம். ஆனால், அந்த நிர்வாக இயக்குனர் எனது புத்தகங்களில் நான் கூறியுள்ளபடி, இஸ்கானது அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றும் **எனது *தீக்ஷை* பெற்ற சீடராக** இருக்கவேண்டும். அதுமட்டுமல்லாது அந்த நிர்வாக இயக்குனர்களின் எண்ணிக்கை, மூன்றுக்குக் குறைவாகவோ, ஐந்துக்கு அதிகமாகவோ இருக்கக்கூடாது.

4. நான் உருவாக்கி, வளர்த்து, நிலைநிறுத்திய அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கதின் அசையா இந்திய சொத்துக்களை அடமானம் வைக்கவோ, விற்கவோ, வேறு பெயருக்கு மாற்றவோ அல்லது வேறு எந்த மாற்றதைச் செய்யவோ கூடாது. மேலும் அவற்றை இஸ்கான் அமைப்பிலிருந்து பிரிக்கவும் கூடாது. இந்த ஆணை எக்காலத்திலும் மாற்றப்பட முடியாதது

5. இந்தியாவின் வெளியே உள்ள சொத்துக்களை அடமானம் வைக்கவோ, விற்கவோ, வேறு பெயருக்கு மாற்றவோ அல்லது வேறு எந்த மாற்றதைச் செய்யவோ கூடாது. மேலும் அவற்றை இஸ்கான் அமைப்பிலிருந்து பிரிக்கவும் கூடாது. ஆனால் அவசியம் ஏற்பட்டால் அவற்றை அடமானம் வைக்கவோ, விற்கவோ, வேறு பெயருக்கு மாற்றவோ அல்லது வேறு எந்த மாற்றதைச் செய்யவோ நிர்பந்தம் ஏற்பட்டால் அச்சூழ்நிலையில் அந்த சொத்தை நிர்வகிக்கும் ஆட்சி குழு ஆணைய உறுப்பினர்களின் அனுமதி பெற்று அதனைச் செய்ய வேண்டும்.

6. இந்தியாவின் வெளியே உள்ள சொத்துக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஆட்சி குழு ஆணையத்தின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

க) சிகாகோ, டெட்ராய்ட், அன்ன் அர்பௌர் சொத்துக்கள்: ஜெயதீர்த்த தாஸ் அதிகாரி, ஹரிகேச சுவாமி மற்றும் பலவந்த தாஸ் அதிகாரி.

கா) ஹவாய், டோக்கியோ, ஹாங்-காங் சொத்துக்கள்: குருகிருபா சுவாமி, ராமேஸ்வர சுவாமி மற்றும் தமால கிருஷ்ண கோஸ்வாமி.

கி) மெல்போர்ன், சிட்னி மற்றும் ஆஸ்திரேலியா பண்ணை: குருகிருபா சுவாமி, ஹரி சௌரி மற்றும் அத்ரேய ரிஷி.

கீ) இங்கிலாந்து (லண்டன் ரட்லெட்), பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்வீடன் சொத்துக்கள்: ஜெயதீர்த்த தாஸ் அதிகாரி, பகவான்தாஸ் அதிகாரி மற்றும் ஹரிகேச சுவாமி.

கு) கென்யா, மொரிஷியஸ் மற்றும் தென் ஆப்ரிக்கா சொத்துக்கள்: ஜெயதீர்த்த தாஸ் அதிகாரி, பிரம்மானந்த சுவாமி மற்றும் அத்ரேய ரிஷி.

கூ) மெக்ஸிகோ, வெனிசுவேலா, பிரேசில், கோஸ்டா ரிக்கா, பெரு, ஈக்குவடோர், கொலம்பியா மற்றும் சிலி சொத்துக்கள்: ஹ்ரிதயானந்த கோஸ்வாமி, பஞ்ச திராவிட சுவாமி, பிரம்மானந்த சுவாமி.

கெ) ஜார்ஜ் டவுன், கயனா, சாண்டோ டோமிங்கோ, செயின்ட் அகஸ்டின் சொத்துக்கள்: ஆதிகேசவ சுவாமி, ஹ்ரிதயானந்த கோஸ்வாமி, பஞ்ச திராவிட சுவாமி.

கொ) வன்குவர், சியாட்டில், பெர்க்லி மற்றும் டால்லஸ் சொத்துக்கள்: ஸத்ஸ்வருப கோஸ்வாமி, ஜகதீசதாஸ் அதிகாரி மற்றும் ஜெயதீர்த்த தாஸ் அதிகாரி.

கே) லாஸ் ஏஞ்சல்ஸ், டென்வர், ஸான் டியாகோ, லகுநா பீச் சொத்துக்கள்: ராமேஸ்வர சுவாமி, ஸத்ஸ்வரூப சுவாமி மற்றும் ஆதிகேசவ சுவாமி.

கோ) நியூ யார்க், போஸ்டன், போர்டோ ரிகோ, போர்ட் ராயல், செயின்ட் லூயிஸ் பண்ணை சொத்துக்கள் : தமால கிருஷ்ண கோஸ்வாமி, ஆதி கேசவ சுவாமி மற்றும் ராமேஸ்வர சுவாமி.

கௌ) ஈரான் சொத்துக்கள்: அத்ரேய ரிஷி, பகவான்தாஸ் அதிகாரி மற்றும் பிரம்மானந்த சுவாமி.

ச) வாஷிங்டன் டி.சி., பல்டிமோர், பிலடல்பியா, மொன்ட்ரியல் மற்றும் ஒட்டாவா சொத்துக்கள்: ருபானுக தாஸ் அதிகாரி, கோபால கிருஷ்ண தாஸ் அதிகாரி மற்றும் ஜகதீச தாஸ் அதிகாரி.

சா) பிட்ஸ்பெர்க், நியூ விருந்தாவனா, டோராண்டோ, கிளீவ்லாண்டு மற்றும் பப்பலோ சொத்துக்கள்: கீர்தானந்த சுவாமி, ஆத்ரேயா ரிஷி மற்றும் பலவந்த தாஸ் அதிகாரி.

சி) அட்லாண்டா, டெண்னேசி பண்ணை, கைன்ச்வில், மியாமி, நியூ ஓர்லீன்ஸ், மிஸ்ஸி ஸிப்பி பண்ணை மற்றும் ஹௌஸ்டன் சொத்துக்கள்: பலவந்த தாஸ் அதிகாரி, ஆதி கேசவ சுவாமி மற்றும் ருபானுக தாஸ் அதிகாரி.

சு) பிஜி சொத்துக்கள்: ஹரி சௌரி, அத்ரேயா ரிஷி மற்றும் வாசுதேவ்.

7. என் பெயரிலுள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், வங்கிகளில் உள்ள நடப்பு கணக்கு, சேமிப்பு கணக்கு மற்றும் நீண்ட கால வைப்பு நிதி ஆகியவை அனைத்தும் இஸ்கானின் சொத்துக்கள் ஆகும். கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிர இவற்றின் மீது எனது கடந்த காலக் குடும்பத்தினருக்கோ, அவரது சந்ததியர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கோ யாருக்கும் உரிமை கிடையாது (கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில சலுகைகளைத் தவிர) என உறுதி அளிக்கின்றேன்.

8. எனது பெயரில் பல்வேறு வங்கிகளில் உள்ள பணம் இஸ்கானுக்காக செலவு செய்யப்பட்டாலும், குறிப்பிட்ட சில வங்கி வைப்பு நிதிக்களின் மூலம் மாதம் ரூபாய் 1000/- மட்டும் (தெளிவற்ற சேர்க்கை) எனது முந்தையக் குடும்பத்தினருக்கு (இரு மகன்கள், இரு மகள்கள் மற்றும் மனைவி) சென்றுசேருமாறு ஏற்பாடு செய்துள்ளேன். அவர்களின் இறப்பிற்குப் பின்னர் மேற்கூறிய வைப்புநிதிக்கள் மற்றும் அதன் மற்ற

பயன்கள் இஸ்கானைச் சென்றடையும். அவற்றில் எனது வருங்கால சந்ததியினருக்கு எந்த உரிமையும் கிடையாது.

9. நான் இதன்மூலம் குரு கிருபா சுவாமி, ஹ்ரிதயானந்த கோஸ்வாமி, தமால கிருஷ்ண கோஸ்வாமி, ராமேஸ்வர சுவாமி, கோபால கிருஷ்ண தாஸ் அதிகாரி, ஜெயதீர்த்த தாஸ் அதிகாரி மற்றும் கிரிராஜ் தாஸ் பிரமச்சாரி ஆகியோரை இந்த உயிலை செயல்படுத்துபவர்களாக நியமிக்கின்றேன். நான் முழு உணர்வு மற்றும் தெளிந்த அறிவுடன், ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழாம் வருடம் ஜூன் மாதம் நான்காம் தேதி, எந்த கட்டாயமும், நிர்பந்தமுமின்றி இந்த உயிலை ஏற்படுத்தியுள்ளேன்.

சாட்சிகள்:

ஏ.சி. பக்திவேதாந்த சுவாமி

மேலே அளிக்கப்பட்ட உயில் பிரபுபதாவினால் கையெழுத்திடப்பட்டு, மூடப்பட்டது. தமால கிருஷ்ண கோஸ்வாமி, பகவான் தாஸ் அதிகாரி மற்றும் பல சாட்சிகள் கையொப்பங்களை இட்டனர். (கையொப்பங்கள் அசல் ஆவணத்தில் உள்ளன).

---

# துணை ஆவணம்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் நிறுவன ஆச்சாரியரும், பக்திவேதாந்த புத்தக நிறுவனத்தின் நிறுவனரும், ஓம் விஷ்ணுபாத 108 பக்திசித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி மகாராஜா ஸ்ரீல பிரபுபாதரின் சீடனும், தற்போது விருந்தாவனத்தின் கிருஷ்ண பலராம கோயிலில் வசிப்பவனுமான அ. ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதாவாகிய நான், ஆயிரத்தித் தொலாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு, ஜூன் மாதம், நான்காம் தேதி அன்று எழுதிய எனது உயிலின் சில தெளிவற்ற பகுதிகளுக்கு விடையளிக்கும் வகையில், என்னுடைய இறுதி உயில் மற்றும் அதன் துணை ஆவணமான இதனை ஏற்படுத்தியுள்ளேன்:

நான் 1977-ம் வருடம் ஜூன் மாதம் நான்காம் தேதி என் உயிலை ஏற்படுத்தி அதன் மூலம் சில ஏற்பாடுகளைச் செய்திருந்தேன். மேற்குறிப்பிட்ட உயிலில் எட்டாம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, எனது கடந்த கால கிரஹஸ்த வாழ்வில் எனக்குப் பிறந்த ஸ்ரீ எம். எம். டே, ஸ்ரீ பிருந்தாபன் சந்திர டே, குமாரி பக்திலதா டே மற்றும் ஸ்ரீமதி சுலுர்மணா டே ஆகியோருக்கும் எனது கடந்த கால மனைவி

ஸ்ரீமதி ராதாராணி டே-க்கும் வாழ்நாள் தேவைக்காக மாதக்கொடுப்பனவுக்கு (allowance) ஏற்பாடு செய்துள்ளேன். ஆயினும் மேற்குறிப்பிட்ட உயிலின் அதுகுறித்த பகுதி எனது எண்ணங்களைச் சரிவரத் தெரிவிக்கவில்லை என்று நான் கருதுவதால் இந்த இணைப்பின் மூலம் அதனைத் தெளிவுபடுத்துகிறேன். இஸ்கான் நிர்வாக இயக்குனர்களின் விருப்பப்படி ஏதாவது ஒரு இஸ்கான் கிளையின் மூலம் ஸ்ரீமதி ராதாராணி டே-யின் வாழ்நாளுக்கு, வட்டியின் மூலம் மாதம் ரூபாய் ஆயிரம் கொடுப்பனவு கிடைக்கும் வண்ணம், ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தாறாயிரத்திற்கான வைப்புநிதியை ஏழு ஆண்டுகளுக்கு ஏற்படுத்தவேண்டும். அவரது மறைவிற்குப் பிறகு இந்த அசலின் மீது அவரது சந்ததியினருக்கோ, குடும்பத்தினருக்கோ உரிமையில்லை.

ஸ்ரீ எம். எம். டே, ஸ்ரீ பிருந்தாபன் சந்திர டே, ஸ்ரீமதி சுலுர்மணா டே மற்றும் குமாரி பக்திலதா டே அவர்களைப் பொறுத்தவரை இஸ்கான் நிர்வாகம் அவர்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் தலா ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய்க்கான வைப்பு நிதிக்கணக்குகளை ஏழு வருடங்களுக்கு ஏற்படுத்தும். வங்கி வைப்பில் வைக்கப்பட்டு அதன் மூலம் வரும் வட்டி ரூபாய் ஆயிரத்தில் இருந்து ரூபாய் இருநூற்று ஐம்பதை அவர்களின் மாதச் செலவுகளுக்கும், மீதம் உள்ள ரூபாய் எழுநூற்று ஐம்பதைக் கொண்டு அவர்களது பெயர்களில் ஏழாண்டிற்கான புதிய தனித்தனி வைப்பு நிதிக்கணக்குகள் துவங்கப்பட வேண்டும். இந்த வைப்புநிதிக்களின் முதிர்ச்சித் தொகை விரயமாகாமல் பாதுகாப்பாக இருப்பதற்காக அரசுப்பத்திரத்திலோ, வங்கி வைப்புநிதியாகவோ, அரசு சேமிப்புத் திட்டங்களிலோ அல்லது அசையா சொத்தையோ/சொத்துக்களையோ வாங்கப் பயன்படுத்தப்படலாம். இருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட நபர்களோ அல்லது அதில் ஒரு சிலரோ இந்நிபந்தனைகளை மீறினால் அவர்களது மாதக் கொடுப்பனவை நிறுத்தி அதனால் கிடைக்கும் ரூபாய் ஆயிரம் வட்டி பக்திவேதாந்த ஸ்வாமி சாரிட்டி டிரஸ்ட்டை சேரும் வண்ணம் ஏற்பாடு செய்ய இஸ்கான் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும் இந்த ஏற்பாடு எனது கடந்த காலக் குடும்பத்தினர்களான மேற்குறிப்பிடப்பட்டோருக்கு மட்டுமே. அவர்களின் சந்ததியினருக்கோ அல்லது குடும்பத்தினருக்கோ இந்தத் தொகையில் எந்த உரிமையுமில்லை என்பதை நான் தெளிவுபடுத்திக் கொள்கிறேன்.

1977-ம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் தேதியில் உருவாக்கிய எனது உயிலைச் செயல்படுத்த நான் சிலரை நியமித்திருந்தேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள செயலாளர்களுடன் மேற்கு வங்காளம், நதியா மாவட்டம், மாயப்பூர் சந்திரோதய ஆலயத்தில் வசிக்கும் எனது சீடன் ஸ்ரீ ஜெயபதக ஸ்வாமியை மற்றுமொரு செயலாளராக நியமிக்கிறேன். மேற்கண்ட எனது உயிலின் செயலாளர்கள், எனது உயிலின் அம்சத்தைச் செயல்படுத்தக் குழுவாகவோ அல்லது தனித்தோ செயல்பட நான் அனுமதியளிக்கிறேன்.

இவ்வாறு எனது ஜூன் 4, 1977 உயிலின் சில பகுதிகளை மாற்றம் செய்கிறேன். இதில் இடம் பெற்றுள்ளவற்றைத் தவிர மற்ற பகுதிகள் உள்ளபடி கொள்ளத்தக்கது.

1977-ம் ஆண்டு, நவம்பர் மாதம், 5-ம் தேதி ஆகிய இன்று எனது முழு உணர்வுடனும், எவரது கட்டாயமுமின்றி இந்த உயிலின் துணை ஆவணத்தை உறுதி செய்கிறேன்.

சாட்சிகள்:

ஏ.சி. பக்திவேதாந்த சுவாமி (கையொப்பங்கள் அசல் ஆவணத்தில் உள்ளன).

# பிற்சேர்க்கை ஆ: தமால கிருஷ்ண மகாராஜாவின் வாக்குமூலம்

**தமால கிருஷ்ண கோஸ்வாமி:** சில தினங்களுக்கு முன்னர் எனக்கு ஓர் உணர்வு உண்டானது.[...] ஸ்ரீல பிரபுபாதா அவர்கள், தமது குரு மகாராஜா தனக்குப்பின்னர் குருவாக யாரையும் நியமிக்கவில்லை என்று பல்வேறு சமயங்களில் கூறியுள்ளார். [...] தமது புத்தகங்களில் கூட ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் குரு என்பவர் தகுதியுடைவராக இருக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறார்.[...]

எனது பங்கு குறித்து எனக்கு கேள்வி எழுந்ததால், என்னுள் ஒரு உத்வேகம் பிறந்தது; ஆகவே கிருஷ்ணர் விடையளித்தார். உண்மையில், ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் யாரையும் குருவாக நியமிக்கவில்லை. [...] அவர் பதினோரு *ரித்விக்*-களை நியமித்தார். அவர் அவர்கள் எவரையும் குருவாக நியமிக்கவில்லை. *ரித்விக்* நியமனத்தை குரு நியமனம் என்று கூறி, கடந்த மூன்று ஆண்டுகளாக நானும் மற்றைய ஆட்சிக்குழு ஆணைய உறுப்பினர்களும் (GBC) இந்த இயக்கத்திற்கு மிகப் பெரிய துரோகம் செய்துவிட்டோம்.

உண்மையில் என்ன நடந்தது என்று நான் விவரிக்கிறேன். நான் முன்பே இதனை விளக்கி விட்டேன்; ஆனால் எனது முந்தைய விளக்கம் தவறானது. உண்மையில் என்ன நடந்தது என்றால், பிரபுபாதா அவர்கள் தாம் சில *ரித்விக்*-களை நியமிக்கப்போவதாகக் கூறியிருந்தார். வேறு சில காரணங்களுக்காக ஆட்சிக் குழு ஆணைய நிர்வாகிகள் சந்தித்தபோது, இது குறித்துக் கலந்துரையாட நாங்கள் பிரபுபாதரைச் சந்திக்கச் சென்றோம். நாங்கள் ஐந்து அல்லது ஆறு பேர் இருந்தோம் (இது மே 28, 1977 சந்திப்பினை குறிக்கின்றது). "ஸ்ரீல பிரபுபாதா அவர்களே, உங்கள் உடல் மறைவிற்குப்பிறகு, நாங்கள் ஏற்கப்போகும் சீடர் யாருடையவர்? உங்களுடையவரா அல்லது என்னுடையவரா?"

பின்னர் அச்சமயத்தில் *தீக்ஷை* பெறக் காத்திருந்தோர் பட்டியல் மலைபோலக் குவிந்திருந்தது. நான் கூறினேன், "ஸ்ரீல பிரபுபாதா, நீங்கள் ஒரு தடவை *ரித்விக்*-களைப் பற்றி கூறியிருந்தீர்கள். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நாங்கள் உங்களை அணுக விரும்பவில்லை, ஆயினும் நூற்றுக்கணக்கான பக்தர்களின் பெயர்கள் இருக்கின்றன - நான் எல்லா கடிதங்களையும் தாங்கி நிற்கின்றேன். நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை."

ஸ்ரீல பிரபுபாதா கூறினார், "நல்லது. நான் இவ்வளவு பேரை நியமித்து..." அதன் பிறகு அவர் அவர்களின் பெயர்களை கூற ஆரம்பித்தார். [...] அந்தப் பிரதிநிதிக்கள் அனைவரும் அவருடைய சீடர்கள் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். அத்தருணத்தில் *தீக்ஷை* பெறும் அந்த பக்தர்கள் அனைவரும் அவருடைய சீடர்கள்தான் என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது. அதற்குப் பிறகு நான் அவரை

இரண்டு கேள்விகள் கேட்டேன். முதல் கேள்வி: "பிரம்மானந்த சுவாமியைச் சேர்க்கலாமா?" பிரம்மானந்த சுவாமி எனக்கு நெருக்கமானவராக இருந்ததால் நான் இந்த கேள்வியைக் கேட்டேன். [...] அதற்கு "இல்லை. அவர் தகுதி பெறும் வரையில் இல்லை" என்று ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் கூறினார். நான் அக்கடிதத்தைத் தயார் செய்வதற்கு முன்னால் அவரிடம் எனது இரண்டாவது கேள்வியைக் கேட்டேன்: "ஸ்ரீல பிரபுபாதா அவர்களே, இவ்வளவு தானா? வேறு யாரையாவது சேர்க்கவிரும்புகிறீர்களா? அவர் கூறினார், "தேவையை பொறுத்து, மற்றவர்கள் சேர்க்கப்படலாம்." அவர் செய்தது மிகத்தெளிவானது என்பது இப்போது எனக்கு புரிகிறது. தனது உடலளவில் *தீக்ஷை* நிகழ்ச்சியை நடத்த முடியாத காரணத்தால், தனது பிரதிநிதிக்களாகச் செயல்படும் செயலாளர்களை அவர் நியமித்திருந்தார். அவர் தனது சார்பாக செயல்பட அதிகாரப்பூர்வமான பதினோரு பிரதிநிதிக்களை நியமித்து, "யார் மிக அருகில் இருக்கிறாரோ அவர் *தீக்ஷை* கொடுக்கலாம்" என்று மிகத் தெளிவாகக் கூறியிருந்தார். இது மிக முக்கியமான குறிப்பு; ஏனெனில், *தீக்ஷை*யைப் பொறுத்தவரையில், யார் மிக அருகிலிருக்கிறார்கள் என்று நாம் பார்ப்பதில்லை; மாறாக நம்பிக்கை யார் மீது உள்ளது என்பதைப் பொறுத்தே அமையும். நாம் யாரை நம்புகிறோமோ அவரிடம்தான் *தீக்ஷை* எடுப்போம். ஆனால் பிரதிநிதிக்களின் மூலம் *தீக்ஷை* பெறுவதற்கு, மிக அருகிலிருப்பவரே போதும். இந்த விஷயத்தில் அவர் மிகத் தெளிவாக இருந்தார். அவர் அவர்களின் பெயர்களைச் சொன்னார். அவர்கள் உலகமெங்கும் பரவி இருந்தனர். அவர் கூறினார், "யார் உங்களுக்கு அருகில் இருக்கிறாரோ, அவரை நாடுங்கள், அவர் உங்களை பரிசீலனை செய்வார். பிறகு, என் சார்பாக, *தீக்ஷை*யளிப்பார்."

அவ்வாறு *தீக்ஷை*யளிக்கும் பிரதிநிதி நம் நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. அது தேவையற்றது. அது குருவிற்கானச் செயலாகும். பிரபுபாதா கூறினார், "நான் இந்த இயக்கத்தை வழிநடத்துவற்கு ஒரு ஆட்சிக் குழு ஆணையத்தை உருவாக்க வேண்டும். நான் கீழ்க்கண்டவர்களை நியமிக்கப்போகின்றேன். பக்தர்கள் நம் இயக்கத்தில் இணைந்து, *தீக்ஷை* பெறும் செயல்முறையைத் தொடருவதற்கு, நான் என் உதவிக்காக சில பிரதிநிதிக்களை நியமிக்க வேண்டும், ஏனென்றால் எல்லாவற்றையும் நான் ஒருவன் மட்டுமே தனியாகப் பராமரிப்பது கடினம், எல்லோருக்கும் உடலால் நான் *தீக்ஷை*யளிப்பது சாத்தியமல்ல."

அவ்வளவுதான். இதற்கு மேல் வேறு எதுவுமே கிடையாது. வேறேதேனும் இருந்திருந்தால், ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் கண்டிப்பாக நாட்கணக்கில், மணிக்கணக்கில், வாரக்கணக்கில் இந்த குரு விஷயத்தை விவரித்து விளக்கிருப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் அவர் ஏற்கனவே ஆயிரக்கணக்கான முறை இதுகுறித்துக் கூறிவிட்டார். அவர் சொன்னார், "என் குரு மகாராஜா யாரையும் குருவாக நியமிக்கவில்லை. அது தகுதியை பொருத்தது." நாங்கள் மிகப் பெரிய

தவறினைச் செய்துவிட்டோம். பிரபுபாதா தம் உடலினை விட்டுப் பிரிந்தபின்பு, இந்த பதினோரு பேரின் தகுதி என்ன? [...]

ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் சந்நியாசிகள் இரண்டு கிரஹஸ்தர்க்களையும் *ரித்விக்*-காக நியமித்திருந்தார். இதன்மூலம் தகுயிருப்பவர் யார் வேண்டுமானாலும் *ரித்விக்*-காகச் செயல்படலாமென்று அவர் காட்டினார். ஒருவர் ஆன்மீகத் தகுதி நிரம்பியவராக இருப்பினும், தனது குருவின் முன்னிலையில் சீடர்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது நமக்குத் தெரிந்த விஷயம்தான். ஆயினும் ஒருவர் தனது குருவின் மறைவிற்குப் பின்னர், தன்மீது விசுவாசம் கொண்டவர்களை சீடர்களாக ஏற்கலாம். ஆனால் அவர்கள் (சீடர்களாக விழைவோர்) முறையான குருவிற்கானத் தகுதிகளை அறியும் ஆற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஆனால் ஒருவரது குரு மறைந்து, அவர் முறையான குருவாக இருந்தால், அது அவரது உரிமை. இது இனப்பெருக்கம் போன்று [...] ஆயினும் ஆட்சிக் குழு ஆணையம் இதனை அடையாளம் காணாதது கவலைக்குரிய செயலாகும். அவர்கள் உடனே (தவறாக முடிவெடுத்து) இந்தப் பதினோரு பேர் குருவாக நியமிக்கப்பட்டனர். எனது விஷயத்தில் நான் நிச்சயமாகச் சொல்லுவேன்; இதற்காக அனைவரிடம் நான் தாழ்ந்த மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன், என்னிடம் மற்றவர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நிச்சயமாக இருந்தது [...] எங்களது பந்தப்பட்ட தன்மை அதன் உச்சகட்ட நிலையில் வெளிவந்தது. “குரு. அற்புதம்! இப்போது நான் குரு. நாங்கள் பதினோரு பேர்கள் மட்டுமே இருக்கிறோம்" [...] மேலும் தவறுகள் நடக்காமலிருக்க இந்தப்புரிதல் மிக முக்கியம் என்று நான் நம்புகிறேன். ஏனெனில், என்னை நம்புங்கள், இது மீண்டும் நடக்கக்கூடும். பிரச்சனை சற்று ஓய்ந்த பிறகு, சில நாட்கள் கடந்த பிறகு, மீண்டும் இன்னொரு சம்பவம் நடக்கப் போகிறது, இங்கே லாஸ் ஏஞ்சலீஸ்ஸிலோ அல்லது மற்ற இடங்களிலோ, நாம் கிருஷ்ணரின் தெய்வீக சக்தியை எந்தத் தடையுமின்றி வெளிக்காட்டும்வரை இது மீண்டும் மீண்டும் நடந்து கொண்டே இருக்கும்.

[...] நான் என்ன கருதுகிறேன் என்றால் - ஆட்சிக் குழு ஆணையம் இக்கருத்தை மிக விரைவில் செயல்படுத்தவில்லையென்றால், அவர்கள் இந்த உண்மையை அறியவில்லையென்றால்: "நான் இந்த 11 பேரை குருக்களாக நியமிக்கின்றேன்." என்று பிரபுபாதா கூறுவதுபோல் நீங்கள் என்னிடம் எந்த வகையான ஆவண ஆதாரத்தையும் காட்டமுடியாது. அவர் யாரையும் குருவாக நியமிக்காத காரணத்தால் அப்படிப்பட்ட ஆவணங்களே கிடையாது. இது கட்டுக்கதை [...] நீ தகுதி பெற்றவனாயின், *தீக்ஷ* பெற்ற நாளன்று, நீ தந்தையாகத் தகுதி படைத்தவன். உனது தந்தை மறையும்போது நீ குருவாகும் உரிமையைப் பெறுவாய், அதுவும் தகுதி இருந்தால் தான். நியமனம் எதுவும் தேவை இல்லை, ஏனென்றால் இதற்கு நியமனமேதும் கிடையாது."

**குறிப்பு:** இங்கே தமால கிருஷ்ண மகாராஜா அவர்கள், தகுதி பெற்ற ஒருவர் தனது குருவின் மறைவுக்குப் பின் தானாகவே குருவாகும் உரிமையைப் பெறுகிறாரென்று கூறுகிறார். அது அவருடைய கருத்து. ஆனால் அத்தியாயம் 2.2.2-ல் (*தீக்ஷா* குருவின் அங்கீகாரம்) கூறப்பட்டபடி ஒருவர் தூய பக்தராக இருப்பதோடு மட்டுமல்லாமல் தனது குருவின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

ஜெய பிரபுபாதா!!